# முரசொலி

ஆசிரியர் மு.கருணாநிதி

2 அணா

முரசு 1 | சென்னை 20—8—54 வெள்ளி | ஒலி 21


# உரிமை பறிப்போர் வீடு....

"பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவைப் பிரித்திருப்பது போலன்றித் தேசிய காங்கிரஸ் மகாசபையானது இந்தியாவைப் (பாஷாவாரியாக) பிரித்திருப்பது உனக்குத் தெரிந்திருக்கலாம். ஏறக்குறைய ஒரேவிதமான நடை உடை பாவனைகளை உடைய ஒரு மொழிபேசும் மக்களை ஒரு மகாணத்தில் சேர்த்து விடுவது சிறந்த ஏற்பாடாகும். தென் இந்தியாவிலுள்ள காங்கிரஸ் மாகாணங்கள் வருமாறு;- 1 ஆந்திரதேசம், அதாவது சென்னைக்கு வடக்கேயுள்ள தெலுங்கு வழங்கும் ஆந்திர மகாணம். 2. தமிழ் நாடு, அதாவது தமிழ் வழங்கும் தமிழ் மாகாணம், 3. கர்நாடகம் அதாவது பம்பாய்க்குத் தெற்கே உள்ள கன்னடம் வழங்கும் நாடு. 4. கேரளம், அதாவது மலையாளம் வழங்கும் மலையாளநாடு. எதிர்காலத்தில் இந்தியாவை மாகாணங்களாகப் பிரிக்கும் போது அவ்வப்பிரதேசத்தின் பாஷை முக்கியமாகக் கவனிக்கப் படும் என்பதில் ஐயமில்லை"

நேசமணியல்ல இப்படி எழுதியிருப்பது; கேரள முரசுமல்ல இப்படி எழுதுவது. இந்நாள் பிரதமர் நேரு பண்டிதர் முன்னாள் விடுதலை வீரனாக --சுதந்தரப் போராட்டத்தின் முன்னேடும் பிள்ளையாக நைனி சிறைச்சாலையிலே வாடியபோதுதான் தன் மகள் இந்திராவுக்கு இவ்வாறு கடிதம் எழுதியிருக்கிறார்.

அதே நேருதான் சென்ற கிழமை பிரதேச காங்கிரஸ் கமிட்டிகளுக்கெல்லாம் சுற்றறிக்கை விட்டிருக்கிறார், இப்படி! "மொழிவாரியாக நாட்டைத் தனித்தனி பகுதிகளாக பிரிப்பது சாத்தியமில்லை. பிரிவினை செய்யப் பட்டால் இருமொழி பேசப்படும் அல்லது பல மொழிகள் பேசப்படும் பிரதேசங்கள் கண்டிப்பாக இங்குமங்குமாக இருக்கும்" 1931-ம் ஆண்டு நைனி சிறைச்சாலையின் அரசியல் கைதி நேருவுக்கும், 1954-ம் ஆண்டு இந்தியப் பிரதமர் நேருவுக்கும்தான் எவ்வளவு வித்தியாசம்! அப்பொழுதெல்லாம் மோதிலால் மைந்தர் ஜனநாயக சிரேஷ்டரராக-பகுத்தறிவுப் பரிதியாக இருந்தநேரம், தேம்ஸ் நதிக்கரையிலிருந்து உன்னத இலட்சியங்களோடு — உயர் எண்ணங்கள் மலரும் பூங்காவாய் கங்கைக் கரைக்கு கால் எடுத்து வைத்த பருவம், புரட்சியின் பொறியாய் — நரிவேலை செய்து, பிரித்தாளும் சூழ்ச்சியால் நம்மையெல்லாம் நாசம் செய்துவந்த வெள்ளையனின் ஆட்சிக்கோர் வைரியாய் அலகாபாத் வீரர் வாழ்ந்துவந்த தருணம்; அப்பொழுதுதான் எழுதியிருக்கிறார், மொழிவழி மாகாணம் காங்கிரஸ் எதிர்காலத்தில் கடைப்பிடிக்கப் போகும் திட்டமான கொள்கையென்று!

கோவ்வைக் கனியைக் கொத்தும் கிளியாய், கிளியோபாட்ராவின் அதரங்களைச் சுவைத்துக் கிடந்த ஜூலியஸ் சீசர்கூட வாளெடுக்கும் வித்தையை மறந்து விடவில்லை. மோக போதையில் கூட அவனுக்கு வீராவேசம் லவலேசமும் குறைந்து விடவில்லை, ஆனால் பதவி மங்கையின் ஸ்பரிசத்தில் லயித்துக் கிடக்கும் மோதிலால் மைந்தரோவெனில் ஆகட்ஸ் 15-க்குப் பிறகு — அவர் 'அரசியலில்' இருந்து 'ஆட்சி இயலு'க்கு புகுந்த பின்னர் தனக்கென புதியதொரு பாதையை வகுத்துக் கொண்டுவிட்டார்.

முன்பு மக்கள் மன்றத்தின் அங்கீகாரத்தையும், கட்சிக் காவலர்களின் விருதுகளையும் ஒருங்கே பெற்ற பாதையிலிருந்து அவர் விலகிடும் போது தான் நல்லவர்கள் நெஞ்சம் நைகிறது. கைகாட்டியை மறந்து விட்ட நினைவும் உதயமாகிறது. அவருடைய அருமைமிகு செல்வியர் இந்திரா காந்தியாருக்குக்கூட இந்த மாற்றங்கள் மருட்சியைத்தான் அளித்திருக்கும்!

இந்த நேரத்திலேதான் செயல் வீரனைத் திகழும் பிரஞ்சு நாட்டு பிரதமர் மெண்டஸ்-பிரான்சு நம் நினைவுக்கு வருகிறார். ஜூலை திங்கள் 20ம் நாளுக்குள் இந்தோ சீனத்தில் அமைதி காட்டாவிட்டால் தான் ராஜினாமா செய்து விடுவதாக அறைகூவல் விடுத்து அவர் அரசு கட்டில் ஏறினார். பின்னரோ அவர் குறிப்பிட்ட நாளுக்குள் தான்கொண்ட கொள்கையை நிறைவேற்றி பதவியை நிலை நிறுத்திக் கொண்டார். அந்தசெயல் சிங்கத்தைத் தான் ஆச்சாரியா வினோபா பாவே இதிகாசத்தில் வந்து போகும் இலட்சிய புருஷர்களுடன் ஒப்பிட்டார், நாழிகை குறிப்பிட்டு, இந்தோ சீனத்து இரணகளத்திலே அமைதி வராதா—அடிமைச் சுமையும் தீராதா என்றெல்லாம் கோழிக் கனவு கண்டு கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு போர் நிறுத்தம் கண்டு பார் போற்றும் மேதையானார் மெண்டஸ்—பிரான்சு. அந்த செயலாளரின் சிறப்பை பற்றி எண்ணும் போது தான் இந்நாட்டுப்பிரதமரும் நம்நினைவை வட்டமிடுகிறார். இது வேதனையைத்தான் தருகிறது, நமக்கு!

பாலின் சுவையை பிரிக்க நினைக்கும் பேதமையையும் தாய்த் தமிழகத்தோடு இணைய வேண்டுமென்ற திரு-கொச்சிப் பகுதி தமிழினத்தின் உரிமையையும் பறிக்கும் டெல்லிக்காரரின் செயலையும் நம்மால் பரிதாபத்தோடுதான் பார்க்கமுடிகிறது. மொழிவழிமாகாணம் பிரிந்தே தீரவேண்டுமென்று முன்பொருநாள் முழக்கமிட்டவர் ஆட்சியிலே தான் இப்போது கண்ணின் கருவிழியைத் தோண்டுவதுபோல பதினொரு உயிர்கள் குழித்துறை, புதுக்கடை, மார்த்தாண்டம் ஆகிய சிற்றூர்களிலேபிணங்களாக்கப் பட்டிருக்கின்றன. நைனி சிறைச் சாலையையும் — அந்த சிறைச்சாலை அலுவலாளர்கள் அனுமதிபெற்று தன் மகளுக்கு எழுதிய கடிதத்தையும் பண்டிதர் மறந்தேவிட்டார். இந்த நிலை நினைத்து திரு. கொச்சித் தமிழ்ப் பகுதியில் வீழ்ந்த பிணங்கள் சிரிக்கின்றன.

மொழிவழி மாநிலப் பிரிவினை ஒரு நோய் என்றால் அந்த 'அரசியல் வியாதிக்கு மூல காரணமாய் விளங்கிய குற்றச்சாட்டிற்கு மோதிலால் மைந்தரும் அவர்தம் காங்கிரஸ் கூடாரமும்தான் ஆளாகிறது. எனவேதான் திரு-கொச்சி தமிழ்ப் பகுதி மக்கள் இப்போது தெளிவு படுத்திக் கொள்ள விரும்புகிறார்கள்; நேருப் பண்டிதர்தான் தாயக இணைப்புக் கிளர்ச்சி என்னும் நோய்க்கு மூலகாரணம்

( 10-ம் பக்கம் )

# உலகத்தின் குப்பை மேடு!

# நாம் கெட்டதுமில்லை; :: :: அவர்கள் வாழ்ந்ததுமில்லை

அன்புள்ள குமார்,

நீ மட்டும் இந்த வாரம் கடிதமெழுதாதிருந்தால், உன்னைப் பற்றி என்னென்ன தவருன முடிவுகள் கட்டியிருப்பேன் தெரியுமா? பாலயோகியாகப் போயிருப்பாய் என்று தீர்மானித்திருப்பேன்; சன்னிதானங்களின் சீடர் குழாத்தில் கலந்திருப்பாய் என்று எண்ணியிருப்பேன். "என்னைப் பற்றி இப்படியெல்லாம் ஏன் முடிவு கட்ட வேண்டும்" என்று கேட்கிருயா? உன் மனதைக் கவர்ந்தவர், மாஜி கவர்னர் ஜெனரல், மாஜி முதல்மந்திரி—ஆச்சாரியார் சுவாமிகள் மடங்களுக்கு ஆள் சேர்த்து வருகிருரே, அதில் நீயும் உன் பெயரை பதிவு செய்து கொண்டிருப்பாயோ என்ற ஐயம்தான் எனக்கு. தவருகக் கருதி விடாதே குமார், நண்பன் நான், என் மனதில் பட்டதைச் சொல்லுகிறேன்.

அரசியல் மண்டலத்தில் ஆங்கேங்கே ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் தலைவர்களை உனக்குத் தெரியும் — செய்தித் தாள்களில் படித்திருப்பாய். ஆனல் சர்ச்சில் பைபிளைப் பற்றி விமர்சனம் செய்தார் என்று படித்திருக்க முடியாது. ஐசன்ஓவர் சுவிசேடத்தின் பெருமைபற்றி சொல்லாற்றினர் என்று கேள்விப்பட்டிருக்க மாட்டாய். இந்த இந்தியத் துணைக்கண்டத்தில் தான் அரசியல் மாஜிகளெல்லாம் புராண இதிகாசங்களுக்கு புத்துயிர் கொடுப்பதற்குத் துடிக்கக் காண்கிறேம். இது வன்மையாகக் கண்டிக்க கூடிய செயலில்லையா? அரசியலில் மதத்தைக்கலப்பதை நீ ஆதரிக்கிருயா? மதபோதனையோடு கூடிய அரசியல்தான் மக்கள் இதமோடு வாழத் துணைபுரியும் என்பதுதான் உன் எண்ணமா? அதுதான் அசைக்கமுடியாத உன் தீர்ப்பு என்ருல், உன்னை சந்யாசியாகப் போயிருப்பாய் என்று நான் எண்ணியது கூட உனக்கு அதிகம் கவுரவம் கொடுத்துக் கூறியதுதான் என்றுகூட நான் சொல்லுவேன், குமார்.

"அறிவாளிகள் செய்யும் பிழைகளைவிட மதாசாரப் பிழைகள் அவ்வளவு ஆபத்தானதல்ல. ஒருவிதத்தில் மூட நம்பிக்கையே மேல். அது அவ்வளவாக சமூகத்தைப் பாதிக்கக் கூடியதல்ல—நாசகாரக் கல்வியைத் தடுத்தாக வேண்டும்"

ஒரு அரசியல் தலைவன், அதுவும் இந்த நாட்டின் ஆக்க மன்றத்தின் சிகரத்தில் உலவியவன் சமுதாயம்தான வெட்டிவேதாந்த திற்குபலியாகவேண்டும்? ஆச்சாரியாரின் கூற்றை சற்று நிதானமாக ஆராய்ந்து பார்த்தால், கல்வியின் பேரால் சமுதாயத்தை அழிக்க உரிமை உண்டென்ருல், மதத்தின் பேராலும் அழிக்க ஏன் உரிமை இல்லை? என்று கேட்பது போலில்லையா? விவேகானந்தர் காவியுடைதாரியாக இருக்கலாம், ஆனல் அவர் புல்லர்களின் கொட்டத்தையும், புரோகிதர்களின் குறும்புகளையும், கண்டித்ததை யாராலும் மறுக்கமுடியாது. அவருடைய புனிதப் பெயரால் நடத்தப்படும் கல்லூரியிலா இப்படிப் பேசுவது? அவரையே அவமானப்படுத்துவதாக இல்லையா?

சென்னை விவேகானந்தர் கல்லூரியில் பேசிய ஆச்சாரியார், படித்தவர்களை தீயவர்கள் என்று

## பொன்முடியின் கடிதம்

பேசக்கூடிய பேச்சா இது? ஆச்சாரியார் பேசியிருக்கிருர் நண்பனே, இவ்வாறு! அவருடைய பிறப்பு, வளர்ப்பு பற்றியல்ல நாம் எடுத்துக் கொள்ள வேண்டியது, அரசியல் தலைவன் பேசலாமா? எனக்காகப் பேசவேண்டாம்—உனக்காக — உன் நாட்டிற்காக எதிர்கால உனது வாரிசுக்காக யோசித்துப்பார் — பேசலாமா இப்படி?.

"அறிவாளிகள் செய்யும் பிழை" என்று ஆச்சாரியார் கூறியிருப்பது தன்னை நினைத்துக் கொண்டு சொல்லியிருந்தால் அது வரவேற்கத் தக்கது தான் — ஏனென்ருல் புதிய கல்வித் திட்டத்தின்மூலம் அவர் செய்தபிழை அவ்வளவு கொடுமையானது. ஆனல் அவரை வைத்துக்கொண்டு படித்தவர்களைத் திட்டுவதை நீ வரவேற்கிருயா? அறிவாளிகள் எங்கோ ஒரு மூலையில் தவறு செய்கிருர்கள் என்பதற்காக மதாச்சாரங்களால் விளையும் கொடுமைகளை ஏற்றுக் கொள்வதா முறை? பொதுமக்களையா அதற்கு பதப் பொருளாகக் கொள்ளவேண்டும்? மனித சொல்லியதோடு நிறுத்திவிடவில்லை; விவஸ்தையற்றவர்கள் என்று திட்டியதோடு முடித்துக் கொண்டுவிடவில்லை; தன்னுடைய நிலையையும் மறந்து தடிப்புள்ள சொற்களையும் வாரி இறைத்திருக்கிருர்.

"சங்கராச்சாரியார் அறிவாளி, அவர் பஜகோவிந்தம் பாடினர். அவர் தெய்வத்தை நம்பினர். திருவள்ளுவர் பார்ப்பனரல்ல—அவர் கடவுள் நம்பிக்கையுள்ளவர். கம்பன் ஒரு பெரியகவி—கடவுளைப் பற்றி எழுதினர். காந்திஜி புத்திசாலி, இருந்தாலும் கடவுளை நம்பினர்." என்றும் வினயமாகச் சொல்லியிருக்கிருர் அந்த முதுகிழவர். விருத்தாப்பியத்தின் காரணமாக இந்தச் சொல்லிலே வீரமில்லாதிருந்திருக்கலாம்; தெம்பில்லாமல் தளதளத்த குரலில் ஒலித்திருக்கலாம். ஆனல் இதில் விஷமில்லையென்றுகருதிவிடாதே; வளர்ந்து வரும் விவேக சக்தியை வீழ்த்திடும் வஞ்சக அணுக்கள் கிடையாது என்று தள்ளிவிடாதே. "அறிவாளிகளெல்லாம் கடவுளை நம்புகிருர்கள்" என்பதற்கும், கடவுளை நம்புகிறவர்களெல்லாம் அறிவாளிகள் என்பதற்கும்அதிக வேறுபாடிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

ஆகவேண்டிய காரியங்களை ஆண்டவனின் மேல் பாரத்தைப் போட்டு உலகே மாயம், வாழ்வே மாயம் என்றுகூறி கட்டித்தங்கத்தையும், காணிக்கை முடிச்சுகளையும் கணக்குப் பார்க்கும் சங்கராச்சாரியாரையும், தேச நலனுக்காக தேக நலத்தையும் எண்ணுது நவகாளி நடந்த மோகனதாஸ் — மணி விளக்கு காந்தியாரையும் ஒரே வரிசையில் சேர்த்துக் கூறியது தான் நமக்கு வேதனையாக இருக்கிறது. ஆச்சாரியார் சங்கராச்சாரியாரின் பகல் வேடத்திற்குத்தான் பக்தி என்று பெயரிடுகிருரா அல்லது அது அற்றவர்கள் முட்டாள்கள் என்று கூறுகிருரா அல்லது, ஒன்றே குலம் ஒருவனேதேவன் என்பது நாத்தீகம் என்று சொல்லுகிருரா என்பது தெரியவில்லை, ஒன்றுமட்டும் சொல்வேன்; நாத்தீகர்களை முட்டாளாக்க முனைந்தவர்கள் இதுவரை யாரும் வாகை சூடியதில்லை. கடவுளைப் பற்றி கவலை கொள்ளாதவர்களும் கெட்டதில்லை.

தோழனே, வாழ்ந்து கெட்ட சமுதாயம் தன்னை நிமிர்த்துக் கொள்ள உன் போன்ற வாலிபர்களைத்தான் நம்பி இருக்கிறது-நம்பிக்கை மோசம் செய்து விடாதே. வணக்கம்.

அன்பன்
**பொன்முடி**

### இது உண்மையா?

தென்னுட்டில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியை பலப்படுத்தி, காங்கிரஸ் முக்கியஸ்தர்களையும் அதில் இணைத்து, அந்த முகாமிற்கு 'கல்கி' தலைமை தாங்கப் போவதாக நிலவி வரும் பேச்சு உண்மை தானு? பி. சோ. கட்சி மீது கல்கி அடிக்கடி அனுதாபம் காட்டி எழுதுவதும், அசோக் மேதாவுக்கும், பட்டம்தாணுப் பிள்ளைக்கும் அவர் விருந்து வைத்ததும் இதை ஒட்டி நடந்த இருட்டறை நாடகங்கள் தானு?

### மெய்தானு?

ராஜகோபாலாச்சாரியாரும், கிருபானந்த வாரியாரும் அடிக்கடி சந்தித்து புதிய திட்டங்கள் தீட்டுவதாகவும், நாட்டில் பக்தி மனப்பான்மை பரவ ஊருக்கு ஊர் மேடை அமைத்துத்தர ஆச்சாரியார் தனது சொந்த செல்வாக்கை பிரயோகிப்பதாக வாரியாரிடம் உறுதி கூறியிருப்பதாகவும் பேசிக் கொள்ளப்படுவது உண்மை தானு?

ஒரு காலத்தில், ஆரியத்தால்தான் சைவம் கெட்டது எனப் பேசிய வாரியார் இப்போது ஆச்சாரியாரோடு ஒத்துழைப்பதின் மர்மம் யாதோ?

# தலையங்கம்

சென்னை [20—8—54] வெள்ளி

## அண்ணன் வீடு சென்று வருவோம் !

பெரியார் ராம்சாமி—காங்கிரஸ் என்னும் காரிருள் நீங்கப் பெற்று ஒளிவிடும் சுயமரியாதைச் சூரியனாக உதயமானரே—அந்த உதய திசை; ஆம் — அந்தக் கிழக்குத்திக்கு — அதுதான் காஞ்சீபுரம் !

தேசீயத்தார்களின் போக்கு திராவிடர் தம்மை வாழ்விக்கும் நோக்கு கொண்டதாயில்லை என்பதை நாட்டுக்கு முரசோலித்துக் காட்டிய பெரியாரின் களம் காஞ்சீபுரம் !

அந்தக் காஞ்சீபுரத்திலேதான் வீரன் புலிகேசியை தோற்கடித்து வாகை மாலை சூடிய தளபதி பரஞ்சோதி பவனி வந்தான். அந்த தீர மகனின் நெஞ்சுக்குத் தீயிட்டு, அவனையும் கோழையர் கூடாரத்துக்குப் பக்தர் வேடத்தில் அனுப்பிய பாதகர்களும் காஞ்சியம்பதியிலே தான் ஒரு காலத்தில் உலவினார்கள். அந்தச் சந்ததி இன்னும் இருக்கிறது—அதை வாழ்விக்கும் சன்னிதானமாம் சங்கராச்சாரியாரின் காமகோடி பீடமும் காஞ்சியிலேதான் இருக்கிறது.

வான்தோடும் கோபுரங்கள்,—மான், மழுவேந்திய கடவுளர்கள்-கோன் இருந்த கோட்டையின் அடித்தளங்கள்—சீர்—சிறப்பு—தேர்—திருவிழா—காமகோடி—ஓம குண்டம்—கலாசாலை —சிலாசாசனம்—எல்லாமே காணலாம் காஞ்சீபுரத்தில் ! அத்தனையும் பார்க்கிறோம்; விழிப்பசி தீரவில்லை—அறிவு தாகம் அடங்கவில்லை—அந்த வீரக்கோமகனைப் பார்த்தால்தான்—அவரோடு சில விநாடியாவது பேசினால் தான்—ஆறுதல் பெறுவேன் என்கிறது, துடிக்கும் நெஞ்சம்.

''தேர் கண்டேன்—தேவர் தம் திருநாள் கண்டேன்''

''தேரும் திருநாளும் கண்டாய் தம்பீ ! நாறும் தோலுமாய் நடுத் தெருவில் அரோகரா போட்டானே ஒருவன்; அவனைக் கண்டாயா?''

''காமகோடியும், ஓமகுண்டமும் கண்டேன்—கண்டேன்.''

''கண்டாய்! கண்டாய்!!—அதே நேரத்தில் வாமமேகலை தரித்த வனிதையர் பல்லோர்—சோமசுரா பானத்தில் மூழ்கிய சோக்கேசர் பக்தர்களால் சூறையாடப்பட்ட செய்திகளையும் தின ஏடுகளில் கண்டாயா தம்பி!''

''கலாசாலை— சிலாசாசனமும் கண்டேன்''

''அதே சமயம்; கல்வி தீது. என்பதையும் ஆராய்ச்சி செய்து அறிவு வாதம் புரிவது ஆகாது என்பதையும் அதிர்வேடிக் குரலில் முழக்கிவரும் ஆச்சார்ய சீடர்களையும் கண்டாயா?''

இப்படியல்லவா அறிவுப் புதையல்கள் கேள்வி ரூபத்திலே கிடைக்கும் நமக்கு; அந்த வீரனைப் பார்க்கும் போது!

பெரியார் பெரும் படையின் ஈடற்ற தளபதி--தகுதியெலாம் பெற்ற தலைவர் ஏறு—தமிழூற்று—தென்றல் காற்று--தீயோர்க்குப் புயலாய்—தெளிவிலார்க்குத் திருக்குறளாய் வாய்த்த பெரு மனிதன் ஆம்—நமக்கெலாம் ஓர் அண்ணா—அவர் உலவும் திருநகரம், காஞ்சீபுரம்!

அங்கே தான் இத்திங்கள் 21, 22 நாட்களிலே தி. மு. கழக மாவட்ட மாநாடுகள் நடைபெற இருக்கின்றன. தெக்கணத்தின் தென்பகுதியிலும், ஓர வட்டாரங்களிலும் தீ தோன்றியிருக்கும் நெருக்கடி மிகுந்த நேரத்திலே காஞ்சியிலே கூடுகிறோம்.

திட்டங்கள் தீட்டித் திரும்பிடக் கூடுகிறோம்—தீட்டியவற்றை நிறைவேற்றிடக் கூடுகிறோம். திரை உலகின் மூலம் கலைவளர்ப்பதோடு மட்டுமின்றி கழகக் கொள்கைகளையும் வளர்த்த முதல்வர் கலைவாணர் கிருஷ்ணன் அவர்கள் சமுதாய மாநாட்டுக்கு தலைமை தாங்குகிறார்.

தென் திசையின் தன்மான முரசாகத் திகழும் அன்பர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைக்கும் பணி புரிகிறார். அரசியல் மாநாடு, ஆற்றல் நிறை சிங்கம்—போர்க்குணம் படைத்த நண்பர் தங்கப்பழம் அவர்கள் தலைமையிலே! அதன் திறப்பாளர் திருச்சி செயல் வீரர்—கல்லக்குடி களம் நின்ற தோழர் எம். எஸ். மணி அவர்கள்.

செங்கற்பட்டு மாவட்டத்தின் செயல் திறம்படைத்த காளையர் அனைவரும், மாவட்டச் செயலாளர் மதிப்பிற்குரிய தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் வரவேற்புக் குழுத்தலைமையின் கீழே—மாநாடு ஓர் இலட்சிய விளக்காக அமைய அரும்பாடுபடுகின்றனர்.

அனைவரின் சார்பிலும், ''காஞ்சி நோக்கி வாரீர்'' என நாமும் அன்புடன் அழைக்கிறோம்.

அண்ணன் வீடு சென்று வருவோம்—சிந்தை மகிழ்வோம்—சகோதரர்களே! செயல் தங்கங்களே! வாரீர்! வாரீர்!


## புதையலைப்பற்றி..

❋

அன்புடையீர், முரசொலியில் மனோராவைப்பற்றிய பகுதியை பார்த்த உடன் பலர் சைக்கிள் வண்டியிலும், கால் நடையாகவும் படைபடையாய் போய்க்கொண்டிருக்கிறார்கள், மனோராவை நோக்கி. எனக்கு நன்றாக நினைவிருக்கிறது தாங்கள் முதல் தடவை மனோராவை பார்த்த உடன், சொன்னீர்கள் இந்தக் கட்டிடம் விதவையைப் போல் யாருடைய ஆதரிப்புமில்லாமல் காட்சி அளிக்கிறது என்று. ஆனால் புதையலில் மனோராவின் பெயர் காணப்பட்ட பின், விதவை நிலை மாறும் தருவாயில் இருக்கிறது. பொன் குட்டத்தைப்பற்றி யாருக்கும் அதிகம் தெரியாமல் இருந்தது. தற்பொழுது, புதையலுக்குப்பின் பொன்குட்டத்தின்தேவை, அதன் அவசியம், அதனால் ஏற்படும் நன்மைகள் இவைகளைப் பொருத்து எதிர்காலத்தில் நல்ல மா மருந்தாக திடகாத்திரத்தை உண்டாக்கும் தெவிட்டாத புதையலாக மக்களிடம் இடம் பெற இருக்கிறது.

சென்ற ஜில்லாப் போர்டு தேர்தலில், நாம், நாடிமுத்துப் பிள்ளையால் நிறுத்திய காங்கிரஸ்காரரை தோற்கடித்து விட்டோம் என்றதால் பேராவூரணி கூட்டத்தில், நாடிமுத்து,-'இனிமேல் ஜாக்கிரதையாக இருங்கள், நான் நினைத்தால் இந்த வட்டாரத்தையே அந்தமான் தீவு ஆக்கி விடுவேன்.' என்று பேசி முடித்தார். புதையலில் காணப் பட்டுள்ள ஊர்கள்தான் நாடிமுத்து சொன்ன வட்டாரம். புதையலால் இனிமேல் அதிகம்பேர் வரத் தொடங்கி இருக்கிறார்கள். அந்தப் பகுதிக்கு வருபவர்கள் தெரிந்து கொள்வார்கள், அந்தமான் தீவைப்போல் காட்சி அளிக்கும், இந்த வட்டாரத்தை! புதையல் தலைப்பு தங்களின் மனத்தில் உதித்த நேரத்திலே, பல உண்மைகளும் வெளிப்பட தொடங்கி விட்டது கண்டு இங்கு உள்ள மக்கள் என்றும் நன்றி செலுத்த கடமைப் பட்டவர்கள் என்பதை சொல்லாமல் இருக்க முடியவில்லை.

கு. அடைக்கலம், பேராவூரணி 14—8—54




### வரலாறு காட்டும் 'வள்ளுவர் நாள்' வீண் ஆராய்ச்சியாம் !

★

கடந்த சட்டசபைக் கூட்டத்தின் போது 'வள்ளுவர் நாள்' பற்றிய கேள்விக்கு மந்திரி சுப்பிரமணியம் 'இருக்கின்ற ஆராய்ச்சி போதும்' என்று அலட்சியமாகப் பதில் கூறியதை நமது சித்திரக்காரர் சித்தரித்திருக்கிறார்.




மங்கோலிய மாவீரன்! விரிந்து கிடக்கும் வரலாறுகளில் 'வீரன்' எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் ஜூலியசீசர் கைப்பற்றியிராத பேரளவு பூமண்டலத்தை அவன் ஆண்டிருக்கிருன், 'ஐந்து மணி நேரம்ஆங்கிலக் கால்வாய் என் கையிலிருந்திருந்தால் அகில உலகத்தையும் ஆட்டிப் படைத்திருப்பேன், எனகூறுரைத்த பிரஞ்சுத் தளபதிநெப்போலியன்பிடித்தாண்ட பகுதிகளை, அளவிலே சிறு கடுகாக்கிக் காட்டியிருக்கிருன். உலகத்தை ஓர் குடையின்கீழ் கொண்டுவர முடியும் என கனவு கண்ட ஆதிக்க மோகன் இட்லரும் தோற்று விட்டான், அந்த வேங்கை மார்பனிடம்!

அணுக்குண்டுக்கும் மேலாக, நாடு, நகரங்களை நாசமாக்கி பூமிக்கு ரத்தச்சாயம் பூசி, வெறியன் என வையகத்து மாந்தரால் வெறுக்கப்பட்டவன் அவன் ஒருவனே!

டெமுஜின்!—அவன் பெயர். இந்தப் பெயர் கேட்டால் கதி கலங்கும் பேரரசுகள் ஆண்ட காலம், பெட்டிப் பாம்பாக ஒடுங்கி கட்டியங்கூறி வாழ, கோட்டை வாசலிலே காத்துக் கிடந்த காலம், டெமுஜின் ஆட்சிக் காலம். இருந்தாலும்...

டெமுஜின்! — அவனுடைய இந்த இயற் பெயரை வரலாறு ஜீரணித்துக் கொள்ளவில்லை. மாருக, புவியரசுகள் அவனுக்குத் தந்த பட்டப் பெயரை-'செங்கிஸ் கான்' என்ற சிறப்புப் பெயரை செமித்துக் கொண்டது,

ஃ ஃ ஃ

செங்கிஸ்கானுக்கு அப்போது இளமைப்பருவம். ஆட்டு ரோமத்தால் செய்யப்பட்ட கம்பளியில் உட்கார்ந்து கொண்டு, தன் எதிரே இருந்து சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்த அவனுடைய உள்ளக் கிழத்தி போர்ட்டை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்.

பாலைவனப் பகுதியிலே வாழுகின்ற அந்தப் பருவ இளைஞனுக்கு அவள்தான் பொழுது போக்கும் இன்பக் கருவியாக அமைந்திருந்தாள். அந்த நேரத்தில், செங்கிஸ்கானுடைய தந்தை வைரிகளால் விஷம் கொடுத்துக் கொல்லப்பட்டார் என்ற செய்தி எட்டியது. பேணி வளர்க்கப்பட்ட தந்தை பிரிந்த மரணச்செய்தி அவனுக்கு பேரிடியாகத்தானிருந்தது; மங்கோலிய இனத்திற்கு எதிர் காலத் தலைவன் நீதான் என்று அவன் தந்தை அவனிடம் அடிக்கடி சொல்லியதை இப்போது நினைத்துப் பார்த்த போது அவன் கண்கள் குளமாகத்தான் செய்தன; என்றாலும் மங்கோலியர்களால் பெருமிதத்துடன் தலைவன் எனப் பாராட்டப்பட்டவன் விஷம் கொடுத்து கொல்லப் படக் காரணம் என்ன, அந்தக் கொடுஞ் செயலைச் செய்த கோழை யார்? என்பன போன்ற கேள்விகள் அவன் உள்ளத்திலே பீறிட்டு எழுந்தன,

வெஞ்சினங்கொண்ட அந்த வீரவாலிபன் பாலைவனத்தை விட்டு அன்றே வெளியேறினன், அவனுடைய வைரிகள் அவனையும் கொல்ல எண்ணி வரண்ட பாலைவனங்கள், இருண்ட காடுகளிலெல்லாம் தேடினர்கள்.

இருபதாண்டுகள் உருண்டோடின. உலகத்தின் எங்கோ ஒரு இடுக்கிலிருந்து திடீரென்று பெரும் படையோடு டெக்ரூல் கான் என்ற முதிர்ந்த தலைவனுடன் மோதினன் செங்கிஸ் கான்.

டெக்ரூல்கானின் வாழ்நாளில் அவனோடு மோதி மண்ணோடு மண்ணாகாதவர்கள் இல்லை என்ற இழிசொல்லுக்கு செங்கிஸ்கான் விதி விலக்காணன். டெக்ரூல் கானின் படை சிதறுண்டு ஓடியது. 'தப்பித்தேன், பிழைத்தேன்' எனக் கதறி களம் விட்டு ஓடிய டெக்ரூல்கான் வழியிலே துருக்கியரால் கொல்லப்பட்டு கோர முடிவை எய்தினன்.

டெக்ரூல் கானின் தோல்விக்குப் பிறகுதான், மங்கோலிய இனப்பிரிவுகளின் கூட்டாட்சியை நிறுவவேண்டுமென்று செங்கிஸ்கானின் உளத்திலே துளிர்விட்டிருந்த ஆசை வெற்றி பெற வழி பிறந்தது.

1206!

மங்கோலிய சிற்றரசர்களின் மாநாடு ஒன்றை கூட்டினன். அப்போதுதான் அவனுக்கு 'செங்கிஸ்கான்' என்ற பட்டம் தரப்பட்டது. இந்தப் பெயர் இடுகுறிப் பெயரா, காரணப் பெயரா என்பதை இதுவரை எந்த வரலாற்று ஆசிரியரும் கண்டதாகத் தெரியவில்லை. சீனக்காரர்கள் 'சொர்க்கமைந்தன்' என்று சொல்லுகிருர்கள். மற்ருெரு சாரார் அந்தச் சொல் தெய்வீக அதிகாரத்தைக் குறிப்பது என்கிருர்கள்.

செங்கிஸ்கானுக்கு வயது ஐம்பது! வெண்புரவியினது தோலினல் செய்யப்பட்ட போர்வைமீது அமர்ந்திருக்கிருன். ஒன்பது கவரிமான்களின் வெண்ணிற வால்களாலான கொடி அவன் தலைக்கு மேல் பறந்துகொண்டிருக்கிறது. மாவீரன், மகேஸ்வரனின் கொரடா, வேந்தர்க்கு வேந்தன் என்ற சிறப்புப் பட்டங்கள் அவனைத் தேடி ஓடி வந்தன. அப்போது அவனது ஆட்சியின் ஆதிக்கத்திட் குட்பட்டிருந்த பகுதி சீனவின் நீண்ட சுவர் முதல் அல்டெய் வரிசைகள் வரையிலுள்ள நிலப்பரப்பாகும்.

செங்கிஸ்கான், மக்கள் மன்றத்திலே, எப்பேர்ப்பட்டவன் என்று கணித்துக்கூற முடியாத வகையில் வாழ்ந்து, வாழ்வை முடித்துக் கொண்டான் என்றுதான் சொல்லவேண்டும். அவன் வெறியனாக இருந்தாலும், வாளெடுத்து களம்புகுந்து விட்டால் இச்சைக்குறிய குழந்தைகளாயினும், பச்சைக்கிளி மாதர்களாயினும் பிணமாக்கத் தவருத அரக்கனுக இருந்தாலும், "திருடர்களுக்கு கடுத் தண்டனை; சீமான்கள் ஏழைகளிடம் இரக்கம் காட்டவேண்டும். போர்க்களத்திலே கருணை காட்டுவதோ கேட்பதோ கூடாது." என்று அவன் வெளியிட்ட 'யஸ்ஸா' பிரகடனம் செங்கிஸ்கானை இதயமுள்ளவர்களின் எண்ணிக்கையிலே சேர்க்கிறது; களங்கமில்லாதவன் என எண்ணத் தூண்டுகிறது.

செங்கிஸ்கானை களத்திலே சந்தித்தவர்கள் காஸ்பியன் கடல் வரை துரத்தப்பட்டு கடலிலே குதித்து தற்கொலை செய்து கொண்டிருக்கிருர்கள்.மாபெரும் படையுடன் மங்கோலியப் படையை எதிர்த்த மகமது ஷாவின் உயிரை அந்தக் காஸ்பியன் கடல் தான் குடித்தது. அவனுடைய மகன் ஜலாலுதீன் சிந்தி நதித் தீரம் வரை துரத்தப்பட்டான். மங்கோலியப் படை, மசூதிகளை படுசூரணமாக்கி, மலர்ச் சோலைகளை மயானக் காடாக்கியது, அந்தப் போரிலேதான்.

செங்கிஸ்கானுக்கு வயது ஐம்பத்தி ஒன்பது! கொடூரமான அவனுடைய முகத்தில் காலத்தின் ரேகைகள் வலை பின்னின. நெற்றியிலே மடிப்புகள் விழுந்து விட்டன. எந்த நேரமும் தன் இனத்தின் எதிர் காலத்தைப் பற்றியே சிந்திக்கத் தொடங்கினன். நாகரீக நாட்டின்

[ 10-ம் பக்கம் பார்க்க ]

நாவலரின் சிறை வாழ்வில்
உருவான சிறந்த வரலாற்று நூலே
★ பண்டைக் கிரேக்கம் ★
( இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. )
விலை 1—0—0
திராவிடப் பண்ணை
தெப்பக்குளம் ○ திருச்சி


# சதி நிரூபிக்கப்படுகிறது

சென்ற இதழில்—தசரதன், வசிஷ்டன், ராமன் மூவருமே சதியில் ஈடுபட்டு பரதனுக்கு, நிபந்தனைப்படி நியாயமாக சேர வேண்டிய ராஜ்ய பாரத்தை ராமன் தலையில் கட்டிவிட முடிவு செய்தார்கள் என்ற உண்மையை ஆச்சாரியார் வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதாக முடித்திருந்தேன். பரதனுக்குப் பட்டம் கட்டுவதாக தசரதன் கேகய மன்னனிடம் கொடுத்த வாக்கை மீறுகிறான் என்றும் குறிப்பிட்டிருந்தேன். இதோ இந்த இதழில் அதே கருத்தையொட்டி ஆச்சாரியார் எழுதுகிறார் கவனியுங்கள்.

"புத்திர பாக்கியம் பெறுமலிருந்த காலத்தில் கைகேயியைத் தசரதன், ராஜகுல வழக்கத்தை அனுசரித்து விவாகம் செய்து கொண்டான். இந்தச்சமயம் கைகேயினுடைய தந்தை கேகயராஜன் தசரதனிடம் வாக்குறுதிபெற்றான்; இவள் வயிற்றில் பிறக்கும்மகனுக்குப்பட்டமென்று. இப்படி அப்போது சொன்னதில் ஒன்றும் வியப்போ வித்தியாசமோ இருந்திருக்க இடமில்லை. அப்போது யாருக்குமே குழந்தைகள் இல்லை. மற்ற மனைவிகளுக்குப் புத்திரப் பேறு உண்டாகவில்லை. புத்திரப்பேறு ஆசைப்பட்டே மூன்றாவது மனைவியைக்கொண்டது. அந்த ஆசையும் நிறைவேறவில்லை. வெகுநாட்கள்கழித்து யாகம் செய்து மூன்று மனைவிகளும் குழந்தைகள் பெற்றார்கள். பட்டமகிஷியின்மகனை ராமன், நான்கு புத்திரர்களுக்குள் மூத்தவனாகவும், சகல உத்தம குணங்களை யுடையவனாகவும், ராஜ்ய பாரம் வகிக்கும் தகுதியைக் கொண்டவனாகவும், மந்திரிமார்கள், நகரத்தார்; கிராம வாசிகள், சிற்றரசர்கள் அனைவரும் யுவராஜப் பதவிக்குத் தகுந்தவன்என்று அவர்களுடைய அன்பைச் சம்பாதித்தவனாகவும் இருக்க, எப்படி அவனுடைய உரிமையையும் ராஜகுல முறையையும் புறக்கணித்து பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்வது நியாயமாகும்?"

தசரதன் வாக்களித்ததையும் ஒத்துக்கொண்டு, அப்படிக் கொடுத்த வாக்கு மீறி—பரதனைப் புறக்கணித்தது தவறு அல்ல என்றும் வாதாடுகிறார் ஆச்சாரியார்—அதற்கு அவர் கூறும் காரணங்கள் என்ன? ராமன் நால்வரிலும் மூத்தவனாம்- யாகத்தில் கிடைத்த தேவ பாயசத்தை மூன்று மனைவிமாரும் ஏக காலத்தில்தான் சாப்பிட்டார்கள் — ஆனாலும் ராமன் மூத்தவன் என்கிறார் ஆச்சாரியார். ஒரு வேளை மூத்தாளின் மகன் என்பதால் மூத்தவன் என்கிறார் போலும் அவர். அப்படியானால் மூத்தாளின் கடைசி மகனும் மூத்தவன் தானே? ராமன் சகல உத்தம குணங்களும் உடையவன் எனவும் கூறுகிறார், அப்படியானால் என்ன அர்த்தம்— அண்ணன் புத்திசாலி என்றால் தம்பி கொஞ்சம் முட்டாள் என்று தானே அர்த்தம் — நான்கு பிள்ளைகளுக்கும்விஷ்ணு அம்சம் சொல்லப்படுகிறது என்று தனது முந்திய கட்டுரைகளில் எழுதிய ஆச்சாரியார், இப்போது நால்வரில் ராமன் சகல உத்தம குணங்களும் பெற்றிருந்தான்என்று கூறுவதால், விஷ்ணு அம்சத்தின் பிரிவுகளான மற்ற மூவரையும் குறை சொல்லுகிறார் என்று தானே அர்த்தம்! ஒருவேளை, முன்கட்டுரையில் அவர் எழுதியது போல ராமன், விஷ்ணு அம்சத்தின் பாதி — லக்ஷ்மணன் கால்பங்கு — பரதசத்ருக்கனர் ஒவ்வொருவரும் அரைக்கால் பங்கு— அதனால் ராமன் சகல குணங்களும் பொருந்தியிருந்தான் என்று கூறுகிறாரோ—அய்யோ அதுவும் பொருந்தாதே-ஏனெனில் அவரே—அதே கட்டுரையின் கீழே, கடவுள் அம்சத்தில் பங்கு கணக்கென்ன வேண்டியிருக்கிறது; எல்லாப் பங்குமே பூரணத்துவம் பெற்றது தான் என்ற கருத்தையும் தீட்டியிருக்கிறார். ஆகவே நான்கு குமாரர்களும் பூரணமே தான்—ஆச்சாரியார் வாதம், ஆச்சாரியாராலேயே தோற்கடிக்கப்படுகிறதா இல்லையா என்பதை சிந்தியுங்கள்.

ராமன்தான் ராஜ்யபாரம் வகிக்க தகுயுதிடையவனம்—கூறுகிறார் இப்படி! பரதனுக்குத் தகுதி கிடையாதா? ராமன் கானகம் சென்ற பிறகுதுணைக்கு லக்ஷ்மணனும், ஆறுதலுக்குத் தந்தையும் இல்லாத பரதன், சத்ருக்கனனோடு சேர்ந்து பதினன்கு ஆண்டு ராஜ்யத்தை நடத்தி வந்தானே--அப்போது என்ன அயோத்தியில் குழப்பமா ஏற்பட்டது? எதிரிகள் படையெடுத்தா வந்தார்கள்? அராஜகம் நடந்துவிட்டதா? அடக்குமுறை தேவைப்பட்டதா? அமைதியாகத் தானே பரதன் அரசு புரிந்திருக்கிறான். பதினன்கு வருடம் கழித்த பிறகு, ராமன் பட்டத்திற்கு வந்த பிறகு வேண்டுமானால் கலகம் நடந்திருக்கிறது-அதுவும் உள்நாட்டு யுத்தம் — தகப்பனுக்கும் மக்கள் எனக் கூறப்படும், லவ, குசன் ஆகியோருக்கும் அஸ்வமேத யாகத்தை அடிப்படையாகக் கொண்ட போராட்டம் நடைபெற்றிருக்கிறது. அமைதியோடு பதினன்கு ஆண்டு ஆட்சி புரிந்த பரதனுக்கு ராஜ்யபாரம் வகிக்க தகுதியில்லையாம் — காடாண்ட போதும் போராட்டம் நடத்திய ராமனே தகுந்தவனாம். ஆச்சாரியார் வாதிடுகிறார்.




ராமன் சகல உத்தம குணங்களும் பொருந்தியவனும்அதனால் பட்டம் கட்டலாமாம். பரதன் என்ற அருமைச் சகோதரன் இல்லாத சமயம் முடிசூடிக் கொள்ள ஆசைப்பட்ட ராமனா உத்தம குணம் கொண்டவன்? வனமேகினன் அண்ணன், எனக் கேள்விப்பட்டதும் வாடிச் சோர்ந்த பரதனைவிட ராமன் எந்த விதத்தில் உத்தம குணம் வாய்ந்தவனோ தெரியவில்லை.

தசரதன் முதலில் கொடுத்த வாக்கை மீறி பரதனுக்குத் தெரியாமல்-ரகசியமாக ராமனுக்கு முடிசூட்ட முயற்சித்தது சரி தான், நியாயமானதுதான்-என்று வாதிக்கிறார் ஆச்சாரியார்.

கொல்லைப்புறமாக மந்திரி சபைக்கு வந்தவரல்லவா ஆச்சாரியார்! அதனால் அவர் தசரதனுக்காகப் பரிந்து பேசுவதில் ஆச்சர்யமில்லை தான்.

இன்னும் பாருங்கள்-ஆச்சாரியார் முரண்படும் கட்டம் வந்துவிட்டது.

'தவிர—பரதனும் கைகேயியும் — முடியைப்பற்றி ஏதொரு ஆசை, அல்லது எண்ணம் கூட வைத்தது கிடையாது. அதைப் பற்றிப் பேச்சே கிடையாது. ஆனபடியால் முறைப்படி ராமனை யுவராஜ்யப் பதவியில் அமர்த்துவதில் ஒரு சிக்கலும் ஏற்படாது என்று அரசன் எண்ணினன். அவ்வாறே கைகேயியின் உள்ளத்திலும் ஏதொரு கல்மஷமும் இருக்கவில்லை, இது கைகேயியின் நடவடிக்கைகளினால் வியக்தமாகத் தெரிகிறது. பரதன் உள்ளத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை,"

இப்படி இந்த இதழில் எழுதியிருக்கிறார். சென்ற இதழில் எப்படி முடித்திருந்தார் தெரியுமா? முறைப்படி ராமனை யுவராஜ்யப் பதவியில் அமர்த்துவதில் ஒருவித சிக்கலும் ஏற்படாது என இந்த வாரக் கல்கி இதழில் எண்ணுகிற தசரதராஜன், சென்ற வாரம்—பரதன் வந்து விடுவானே என பயந்து, ராமனை அவசர அவசரமாக இரண்டாவது முறை கூப்பிட்டு வரச்சொல்லி, அவனிடமும் நிலையை விளக்கி — மறுநாளே யுவராஜ்ய பட்டாபிஷேக ஏற்பாடுகளை கவனிக்கிறான்.

"தெருவெல்லாம் தண்ணீர் தெளித்து அலங்காரம் செய்யப் பட்டிருந்தது. ஜனங்கள் தங்கள் வீடுகளின்மேல் பலவித அழகிய கொடிகள் பறக்கவிட்டிருந்தார்கள். ஆடை அணிகள் பூண்டு, சந்தனம் பூசி, புஷ்பம் அணிந்து எங்கே பார்த்தாலும் கூட்டம் கூட்டமாக ஜனங்கள் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள், கோயில்களில் வாத்யகோஷம்."

அயோத்தி இப்படி ஆனந்தமாக இருக்கிறது—ஆனல் இந்த சம்பவங்கள் எதுவும் கைகேயி சொந்தக்காரியும், — தோழியும்,

[ 10-ம் பக்கம் பார்க்க ]

## இது நிஜமா?

அண்மையிலே இந்தியத் துணைக்கண்டத்தின் நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக் இலங்கை சென்றிருந்தபோது சாலை நெடுக 'திரும்பிப்போ'-'திரும்பிப்போ' என்று எழுதப்பட்டிருந்ததாமே, இது நிஜந்தானா? அந்த நேரத்தில் இலங்கை அரசின் நிதி இலாகாவில் ஏதோ தகராறு நடந்துகொண்டிருந்ததாகவும், அப்போது தேஷ்முக் வந்ததை இலங்கை வாசிகள் வெறுத்ததாகவும் சொல்லப்படுகிறதே உண்மையா?

## மாமரத்தடியிலே இருக்குது மகிமை

★

# புதையல்

## 1.

வெள்ளியம்பலம், தன் தோட்டத்துக்குள்ளே உலவியபடியிருந்தார். அவருடைய கண்கள் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டேயிருந்தன. அப்போதுதான் இரவு உணவை முடித்துக் கொண்டிருக்கிறார் என்பதை அடிக்கடி வெளியான பலமான ஏப்பங்கள் அறிவித்துக்கொண்டிருந்தன. தோட்டத்தின் திறந்த வாசலிலே யாரையோ எதிர்பார்த்து அவர் கண்கள் அலைவது நன்றாகப் புரிந்தது. கறுத்த மேனியும், கம்பீரமான தோற்றமும், பயங்கரமான மீசைகளும் உடைய வெள்ளியம்பலம், கையிலேயும் ஒரு அழுத்தமான தடியை வைத்திருந்தார் என்றால் கேட்க வேண்டுமோ? அவருடையகழுத்திலே யிருந்த மெல்லிய தங்கச் சங்கிலியும், அதிலே தொங்கிக் கொண்டிருந்த தாயத்தும் நிலவின் மங்கலான ஒளியிலே மின்னிக்கொண்டிருந்தன. அடிக்கடி கனைத்துக் கொண்டு வேங்கை போல தலையை நிமிர்த்தி கண்களையும் சுழற்றிக் கொண்டு அலைந்த வெள்ளியம்பலம் மருங்கப்பள்ளம் வட்டாரத்திலே ஒரு பெரிய புள்ளி. பண வசதியிலே என்று கூறிவிட முடியாது; படை வசதியிலேதான்! அம்பலம் வருகிறார் என்றாலே போதும்; அந்த வட்டாரத்து மக்கள் அச்சத்தை அணைத்துக் கொண்டு, ஆளுக்கொரு மூலைக்கு போய் விடுவர். ஊரிலே நடைபெறும் நல்லது கெட்டது அனைவற்றிலும் அம்பலம் இல்லாமல் இருக்க மாட்டார், யார் வீட்டிலாவது விசேஷமென்றால், இவரே அந்த விசேஷக்காரனாக மாறி காரியங்களை கவனிப்பார். அவன் மீதுள்ள அன்பால் இதைச் செய்கிறாரா—அல்லது ஜனங்கள் மனதிலே தன்னுடைய உருவமும் பெயரும் பதிந்து கிடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செய்கிறாரா—அல்லது அந்த விசேஷங்களில் எவ்வளவு வேண்டுமானாலும் பணத்தை சுருட்டலாம்; கேட்பதற்கு ஆளில்லை—என்ற தைரியத்தில் செய்கிறாரா—என்பதெல்லாம் அப்பகுதியின் மக்களால் பேசப்பட்டு, அப்படிப் பேசுவதே உயிருக்கு ஆபத்து தரும் வேலை என்று அவர்களாலேயே தீர்மானித்துக் கொள்ளப்பட்டு கைவிடப்பட்ட விஷயங்கள். தெருவிலே அவர் போகும் போது யாராவது கொஞ்சம் நிமிர்ந்து பார்த்து விட்டால்—உடனே அம்பலம் அவன் மீது சீறி விழுந்து ஒரு அடியும் கொடுத்து வீட்டுத்தான் போவார். காட்டு ராஜா தர்பார் என்று நினைப்பதற்குக் கூட பயப்படுகிற ஜீவன்கள் வாழுகிற பகுதியிலே அம்பலம் வைத்தது தானே சட்டம். ஆனால் அம்பலத்தின் மனதிலே மட்டும் ஒரு பயம் கருத்தரிக்க ஆரம்பித்தது, என்னமோ உண்மைதான். எவ்வளவு நாளைக்கு எல்லோரையும்மிரட்டி வாழ முடியும்—ஒரு நாளைக்கு எல்லோரும் ஒன்று சேர்ந்து கொண்டு எதிர்க்க ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது—என்பது போன்ற சந்தேகங்கள் வளர ஆரம்பித்தன. இந்தப் பயமும் சந்தேகமும் வெள்ளியம்பலத்திற்கு சிறிதுநேர சிந்தனையை அளித்தனவே தவிர, அவரது காரியங்கள் எதற்கும் தடையாக நிற்கவில்லை, அப்படித் தடையாக நிற்காத காரணத்தால்தான்மருங்கப்பள்ளத்தின் சிவன் கோயிலைச் சுற்றி பூமியைத் தோண்டிப் பார்த்து அந்த பொன் குவியலை எப்படியும் எடுத்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டார் அவர். அந்த வேலையைநடத்துவதற்காக குறிக்கப்பட்ட நாள் தான் அவர் உலவிக் கொண்டிருக்கும் அந்த நாள். குறிக்கப்பட்ட நாள் என்றால், அவரே குறித்துக் கொண்ட நாள் அல்ல; ஜோசியர் குறித்த நாள். அம்பலத்திற்கு ஆருடம் ஜோசியம் முதலியவற்றில் அளவற்ற நம்பிக்கையுண்டு. அதனால்தான் ரகசியமாக செய்ய வேண்டிய இந்த வேலைக்குக் கூட பஞ்சாங்கத்தைப் புரட்டும்படி கூறினார். பஞ்சாங்கம் பார்த்த அய்யர், அம்பலத்தின் குணங்களை நன்கு தெரிந்தவர். தேடிப் போகும் காரியத்தில் வெற்றி ஏற்படும் என்று சொல்லி பிறகு ஏற்படாவிட்டால் தன் உயிருக்கே மோசம் வந்து விடும் என்று அவருக்குப் புரியுமாதலால்—சக்கிர திசையும் இருக்கிறது—அதோடு சனி பார்வையும் லேசாக இருக்கிறது—அதனால் ஜெயத்தை மதில் மேல் பூனை போலத்தான்சொல்லவேண்டும். ஒரு வேளை ஜெயமும் கிடைத்து விடலாம்—என்று மிகத் தெளிவாக ஜோசியம் கூறி நாள் பார்த்துக் கொடுத்து விட்டார்.



ஏககாலத்தில் பல இடங்களில்தோண்டி பார்த்து பொற்குவியல் இருக்குமிடத்தை எப்படியும் கண்டுபிடித்து விட வேண்டுமென்பதற்காக ஐம்பது ஆட்களுக்கு மேல் ஏற்பாடு செய்திருந்தார். அவர்களுடைய வரவை எதிர்பார்த்துத்தான் தோட்டத்து வாசலிலும் காத்திருந்தார். அவர்களும் வந்து விட்டார்கள்.

"ஏண்டா இவ்வளவு நாழி?"

அவர்கள் மௌனமாய் நின்றார்கள். நாழிகையானதற்கு சரியான காரணமிருந்தாலும், அதைச் சொன்னால் எதிர்த்துப் பேசியதாக ஆகிவிடும் என் பயம் அவர்களை மௌனமாக் தியது.

"டேய் சாம்பான்—சக்கிலி—முனியா—எல்லா பயலும் ஜாக்கிரதையா இன்னைக்கு வேலை கவனிக்கணும். இல்லேன் தோலைஉரிச்சிடுவேன். ஆமாம்."

என்று சொல்லிக் கொண்டே வெள்ளியம்பலம் முன்னே நட தார். மற்றவர்கள் பின்னே நட தார்கள். அவர்கள் ஒவ்வொரு வரிடமும், மண்வெட்டி, கடப்பாறை முதலிய ஆயுதங்கள் இருந்தன. தோட்டத்துக்குப் பின்புறமுள்ள வாய்க்காலை கடந்து அங்குள்ள ஒற்றையடி வரப்பின் மீது அம்பலம் முன் செல்ல மற்றவர்களும் பின் தொடர்ந்து சென்ற காட்சி ஊ மக்கள் யாருக்கும் தெரியாது. இரவு 8—மணி ஆகிவிட்டாலே சிராமங்கள் அடங்கி விட்டதாக தானே அர்த்தம். இரவு நேரத் துப் பறவைகளின் வாட் சங்கீதமும், நீர் தேங்கிய குழி களின் மேலே அமர்ந்து தவளை கள் பாடும் கொர கொர கோ சும் வெள்ளியம்பலத்தின் அந் அணிவகுப்புக்கென தயாரிக்கப்பட்ட இசையமைப்பு போல் இருந்தன. பலவயல்களைக்கடந் அவர்கள், கடைசியாக அந் சிவன் கோயில் பக்கம் வந்துவிட்டார்கள். நிலவு மேகத்தில் மறைந்து கொண்டு, வெளி வரு வதற்குத் திண்டாடிய காரண தால் தெளிவாக வழி தெரி தற்கு அம்பலத்தின் கையிலிருந்த பழைய 'டார்ச் லைட்' பயன்பட்டது. கோயிலுக்கு வெளியிலே ஆட்களை நிறுத் வைத்துவிட்டு, அம்பலம் மட்டும் கோயிலுக்குள்ளே நுழைந்து அங்குள்ள கல்லிலே செதுக்கப்பட்டிருந்த எழுத்துக்களை அவர் எத்தனையோ முறை துருவித் துருவிப் படித்திருந்தாலும்—இப்போது ஒருமுறை படிக்க விரும்பினார். டார்ச்லைட்டை அந்த எழுத்துக்களின் மீது அடித்தார்.

"எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே, காக்

மூக்கு நிழலிலே, கண்டாலும் கம்மாளர் கண்ணிலே......

அம்பலம் இன்னும் படித்தார்- தேய்ந்து மறைந்து போகும் நிலையிலுள்ள அந்த கடைசி வரியையும் படித்தார்—

"எழுபது கோடி பசும் பொன்" என்ற அந்தக் கடைசி வரி அம்பலத்தின் நெஞ்சிலே எவ்வளவு படபடப்பை உண்டாக்கியது தெரியுமா? டார்ச் லைட் ஒளிபட்டு மின்னும் அந்த எழுத்துக்கள் எல்லாம் அம்பலத்தின் கண்ணுக்கு வைரமழை கொட்டுவது போலத்தோன்றின. தனக்குத் தானே ஒரு முறை பொருள்கூறிக்கொண்டார்.

"எழுவான் என்றால் சூரியன்- தொழுவான் என்றால்-இந்தக் கோயிலில்இருக்கிற ஆண்டவன்- சூரியனுக்கும் இந்த ஆண்டவனுக்கு மிடையிலே—அப்படியானால் சூரியன்உதயத்திலிருந்து சாளுவநாயக்கன் பட்டினம்வரையிலே வியாபித்திருக்கிற கடலிலே பசும் பொன் இருக்க முடியாது - அதனால் சாளுவ நாயக்கன் பட்டினத்திற்கும் இந்தக் கோயிலுக்கும் இடையிலே தான் அந்தப் புதையல் இருந்து தீரவேண்டும் - காக்கை மூக்கு நிழலிலே என்பதையும் தான் காலையிலே ஆராய்ந்து விட்டோம்—அதோ இருக்கிற ஒதிய மரத்தின் மேல் காலையில் அமர்ந்த காக்கையின் மூக்கு நிழலை நான் அப்போதே குறித்துக் கொண்டேனே: அந்தக் குறிப்பு சரியாகத் தான் இருந்து தீர வேண்டும்—என்னமோ— எல்லாம் சிவன்செயல்-கடவுளே! மருங்கப்பள்ளத்து மகேஸ்வரா, தேடும் பசும் பொன் கிடைத்து விட்டால், தங்கக் கட்டிகள் அகப்பட்டுவிட்டால், உனக்கு ஒரு வெள்ளி ரிஷப வாகனம் செய்து வைக்கிறேன்"—

இப்படியெல்லாம் ஆசைக் கனவு கண்டவாறு கோயிலுக்குள்ளிருந்து வெளிவரத்திரும்பினார். திரும்பிய அவர் கவனத்தை ஏதோ ஒரு ஒலி இழுத்தது. அப்படியே அசையாமல் நின்று கவனித்தார்.

இச்-இச்-என்ற ஒலி! அது என்ன ஒலி என்பதை அவர் புரிந்து கொண்டார். மீண்டும் கவனித்தார்.

போதை நிறைந்த வார்த்தைகள் அவர் காதுகளில் மோதின,

"அத்தான்!"

"கண்ணே!"

"ராஜா!"

"என்னடி ராஜாத்தி!"

வெள்ளியம்பலத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்த ஒலிக்கு உரியவர்கள் யார் என்பதைப் பார்த்துவிட வேண்டுமென்று ஆசை துடித்தது, அதோடு தன் காரியத்திற்கும் அவர்கள் ஏதாவது இடையூறாக வந்து விடுவார்களோ என்றும் பயந்தார். யார் அவர்கள்? அவரை யறியாமல் அவர் தடித்த உதடுகள் அசைந்தன இப்படி! "ஒருவேளை-பார்வதிபரமேஸ்வரனுக்வேயிருக்குமோ —சேச்சே! கைலாசத்தில் இடமில்லாமலா— இங்கே வந்து......ஏன் வந்தால் என்ன........ வரமாட்டார்களா என்ன......அப்படி அவர்களாக இருந்தாலும்—ராஜா, ராஜாத்தி என்று கூப்பிட்டுக் கொள்ள மாட்டார்களே....,

சந்தேகத்தின் ஏகப் பிரதிநிதியாக வெள்ளியம்பலம் நின்று கொண்டிருந்தார், பெருமூச்சையும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு!

மறைந்திருந்து அவர்கள் யார் என்று பார்த்துவிடலாம்—

# கருணாநிதி

சேச்சே!—இந்த நிலையில்போய் கூடாது! கூடாது!

தனக்குத்தானே புத்தி சொல்லிக்கொண்டார். தங்கம் தேட வந்தவர் இன்பம் தேடும் கிள்ளைகளின் தென்றல் மொழியிலே மனதைப் பறிகொடுத்தார்,

மீண்டும் யாழ் அதிர்ந்தது.

'மறக்க மாட்டீர்களேகண்ணு!' பதில் வரவில்லை-'இச்' என்ற' ஒலி மட்டும் காற்றில் மிதந்து அவர் காதில் புகுந்தது.

வெள்ளியம் பலத்திற்கு நிலை கொள்ளவில்லை. இந்தப் பிரச்சினைக்கு சீக்கிரம் ஒரு முடிவு கட்டினால் தான் தன்னுடைய பொன் தோண்டும் காரியம் விரைவில் நடைபெற முடியும் என்ற தீர்மானத்திற்கு வந்தார். ஆட்கள் அனைவரையும்அழைத்து கூச்சலிடச் செய்து, அவர்களை விரட்டி விடலாம் என்று முடிவு செய்தார். ஆட்களை அழைப்பதற்காக ஒரு அடி எடுத்து வைத்தார். பட பட வென ஒரு சிறு சப்தம்—அம்பலம் திடுக்கிட்டுப் பார்த்தார். ஒன்றுமில்லை. தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருந்த ஒரு வெளவாலிடம் இன்னொரு வெளவால் நெருங்கியதால் வந்தவினை; அவ்வளவுதான் துடித்துக் கொண்டிருக்கும் இருதயத்தை அழுத்தியவாறு மீண்டும் நடக்க ஆரம்பித்தார்.

சற்று பலமாகவே பேச்சுக் குரல் கேட்டது. அம்பலம் தொடர்ந்து நடக்காமல் நின்று விட்டார்.

"அத்தான்—நடந்ததையெல்லாம் மறந்து விடுங்கள்—இனி மேலாவது........."

அவ்வளவுதான் அவர் காதில் விழுந்தது—அதற்குமேல் பேசியது சரியாகக் கேட்கவில்லை. இனி ஆட்களை இழுத்துவந்து கலாட்டா செய்ய வேண்டியது தான் என்று எண்ணியபடி வேகமாக வெளியேறினார் அம்பலம். ஆட்களை அழைத்து வந்து கலவரம் செய்தால் அதனால் ஏதாவது விபரீதம் ஏற்பட்டு ஊர் கூடிவிட்டால்—பிறகு, தான் நினைத்தபடி தங்கம் வெட்டியெடுக்கும் காரியம் நடக்காமல் போய் விடுமே, ஜோசியர் கூறிய நாளைத் தவற விட்டு விட்டால், மறுபடியும் இப்படி ஒரு நாள் கிடைக்காதே— என்றும்யோசிக்கத் தொடங்கினார். சரி—தானே போய் அவர்களை மிரட்டிவிரட்டுவது—என்றும் முடிவு செய்து கொண்டு மறுபடியும் கோயிலுக்குள் திரும்பினார்.

'இச்' சப்தம் மாறி மாறிஒலித்துக் கொண்டிருந்தது–அம்பலம் சிறிது தயங்கி நின்றார். ஆண் குரல் கேட்டது.

"பரிமளம்! அதோ இருக்கிறது பார், அந்த மாமரம்— அந்த மரத்தடிதான் தங்கம் புதைக்கப் பட்ட இடம்"

இந்த வார்த்தைகள் வெள்ளியம்பலத்தின் காதில் விழுந்ததோ இல்லையோ உடனே எந்தவிததயக்கமுமின்றி உள்ளே பாய்ந்தார். கோயிலின் பின்புறப் பக்கமாக உள்ள ஒரு சிறு சுவற்றின் மறைவில் தான் அவர்கள் இருந்தார்கள் போலும்-அம்பலம் அங்கு பாய்ந்தாரோ இல்லையோ அவர்கள் இருவரும் நடு நடுங்கி விட்டார்கள். "அத்தான்" எனக் கட்டித்தழுவிப் பின்னிக் கொண்டாள் அந்தப் பெண்ணழகி. அப்படித் தழுவியது இமைப் பொழுதுதான்—அதற்குள் அம்பலம்,

"எந்த மாமரத்தடியிலடா தங்கம் புதைந்திருக்கிறது— சொல்லடா!" என்று கூவிக் கொண்டே அங்கு பாய்ந்ததைக் கண்டு, இரு புறாக்களும் ஓட ஆரம்பித்தன—வெள்ளியம்பலம் ஒரே தாவாகத் தாவி அவனைப் பிடித்துவிட எண்ணினார். அப்படித் தாவிய நேரத்தில் கல் இடறிக் கீழே விழுந்து காலிலே சரியான அடிபட்டு விட்டதால் உடனே அவர் ஆட்களை அழைக்க ஆரம்பித்தார்—ஆட்கள் ஓடி வரவே, அவர்களிடம், "டேய் சக்கிலி, சாம்பான்! இரண்டு பேர் இப்படி ஓடுகிறார்கள்-ஆம்பளையும்,பொம்பளையும்- விடாதீங்க, பிடியுங்க-ஓடுங்க!" என்று கத்தினார். ஆட்கள் ஓட ஆரம்பித்தனர். "டேய் முனியா! நீயும் சில ஆளுகளும் — நம்ப ஊரு ரோட்டிலேயும், வயல் வரப்புலேயும் நில்லுங்க –அந்தப் பயலும் சிறுக்கியும் ஊருக்குள்ளே நுழைஞ்சுதான் தீரணும் —எப்படியும் புடிச்சுடலாம்!" என்று முனியனுக்கு உத்திரவு போட்டார். மற்றவர்கள் எல்லாம் கிழக்கு நோக்கி ஓடினார்கள்.

காதல் புறாக்களும் கிழக்கு நோக்கித்தான் பறந்தன — கிராமத்திலே எத்தனையோ பாதைகள். எத்தனையோ வயல் வெளிகள். எத்தனையோ வரப்புகள் —அவைகளில் எந்த வழியாக ஓடினார்கள் என்று எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? முழங்காலில் நல்ல அடி பட்டு விட்டதால் நொண்டியபடி வெள்ளியம்பலம் எழுந்தார். கையிலிருந்த டார்ச்லைட் விழுந்த வேகத்தில் கண்ணாடி உடைந்து போயிருந்தது. ஆனாலும் வெளிச்சம் காட்ட சிறிது உதவியது. அதன் துணையோடு சுற்று முற்றும் பார்த்தார். அந்தப் பெண்ணின் மேலங்கி கீழே கிடந்தது. ஒரு நல்ல செருப்பும் கிடந்தது, இரண்டு செருப்புகளில் ஒன்றைப் போட்டுவிட்டு ஓடியிருக்கிறான், அவசரத்தில் என்று அம்பலம் தனக்குள் சொல்லிக் கொண்டார். லைட்டை கொஞ்ச தூரத்தில் அடித்து தேடிப்பார்த்தார். மற்றொரு செருப்பு காணப்படவில்லை. மேலங்கியையும், செருப்பையும் கையில் எடுத்துக் கொண்டு, நொண்டியபடி நடந்தார்.


"மாமரத்தடியில்தான் தங்கம் புதைக்கப்பட்டது" என்று கூறினானே–அது எந்த மாமரத்தடி? எத்தனையோ மாமரங்களில் எந்த மரத்தைக் கண்டு பிடிப்பது? உம்!—காக்கை மூக்கு நிழல் விழுந்ததோ — ஒதியமரத்தடி! இவன் மாமரத்தடி என்கிறான் – எனக்கு ஒன்றும் புரியவில்லையே —கடவுளே!" என்று உளறிக் கொண்டே நகர்ந்தார் அம்பலம். அவரது ஆட்களோ வேட்டை நாய்களைப்போல மோப்பம் பிடித்தவாறு, கிழக்கு நோக்கிப் பறந்த அந்த காதல் ஜீவன்களை தேடி அலைந்தார்கள். வாய்க்காலின் உட்புறமாக மறைந்தும், புதர்களில் பதுங்கிப் பதுங்கிப் பார்த்தும், கால்களிலும், உடலிலும் குத்திக் குருதி வழியச் செய்யும் முட்களை சமாளித்துக் கொண்டும், அந்த இருவரும் லட்சியமற்ற ஒரு திசையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தார்கள், ஓடியவர்கள் பின்னால் திரும்பிப் பார்த்தார்கள். பத்து பேர் தங்க்ள் பாதையிலே வந்து கொண்டிருப்பது தெரிந்தது. வரப்பிலே மறைந்தபடி எதிரேபார்த்தார்கள். எதிரேயும் நாலைந்துபேர் வருவது தெரிந்தது,

"சரி அகப்பட்டுக் கொண்டோம் அத்தான்" என்று நடுங்கும் கரத்தால் இறுக அணைத்துக்கொண்டாள் அவள்." 'பயப்படாதே பரிமளம்!" என அவள் நெளியும் கூந்தலை தடவிக் கொடுத்தான் அவன்–

❋

திருத்தம்:— மருங்கப் பள்ளத்தில் உள்ள கோயில் மாரி கோயில் என முன் இதழில் குறிப்பிட்டிருந்தது. மாரி கோயில் அல்ல; சிவன்கோயில் என திருத்திக்கொள்ளவேண்டுகிறோம்.

[ வளரும்




★

ஊருக்கு நேர்கிழக்கே; களத்து மேட்டில்;
உழவுக்கு உயிர்கொடுக்கும் மாடு கட்டிப்
போரடித்துக் கொண்டிருக்கும் சமயந் தன்னில்;
புதுமனைவி அங்குவரக் கண்ட குப்பன்;
நேர்க்கோடு போலிருக்கும் பாதை மீது;
நடந்தபடி, பறந்தபடி, சென்றான். மங்கை,
கூர்விழியால் சுவைபார்த்து; மூன்று நாளாய்க்,
கொடுக்காத உதடுகளால் "அத்தான்" என்றாள்.

கணவனுக்குத்தான் கொண்டு வந்த சோற்றைக்;
கை வளையல் சத்தமிட ஊட்டிப்; பின்னர்,
பணங் கொடுத்து வாங்கியதோர் பலாப் பழத்தின்
பொன்நிறத்துச் சுளைதந்தாள். அதனைத் தந்து,
மணிக் "கட்டில் பேச்சு" தந்தாள், துணியி னாலே,
மறையாமல் இருந்துவரும் உதடு தந்தாள்,
இணையில்லா வரிச்சிரிப்பு தந்தாள். அன்னோன்;
இத்தனையும் தந்தவட்கு முத்தம் தந்தான்.

கருவேல மரத்தடியில், கணவன் தந்த
கனிமுத்தம் தனைவாங்கிக் கொண்டு, மங்கை
திரும்பிவரும் தருணத்தில்; இரண்டு நண்பர்—
செந்தமிழைக் கெடுப்பவர்க்கு வால் பிடிக்கும்
ஒரு தமிழன்; திருகாத மீசை யுள்ளோன்;
வேண்டுமென்றே உண்மைதனை மறுத்துக் கூறி,
வருகின்ற ஓர்தலைவன் தனைக் குறித்து,
வைகின்ற பேச்சுதனை—மேலும் அன்னோர்;

"தமிழரிலே வட நாட்டான் இருக்கு மட்டும்,
தமிழ்நாடு அந்நியர்க்கு அடமா னந்தான்,
அமுதான தமிழ்ச் சொல்லால் "வணக்கம்" என்றால்;
அதை மறைக்க "நமஸ்காரம்" வந்தே தீரும்.
நமக்குள்ளே விரோதிகளை வளர்த்து வந்தால்;
நம் நாட்டில் அந்நியன்தான் குடும்பம் செய்வான்,
சமுதாயம் திருந்துதற்கு, முதலில் இந்தச்
சழக்கர்களின் சதைஉடலைக் கிழிக்க வேண்டும்!

நூலிழைக்குத் தறியிடத்தில் வேலை அன்றி
நல்யாழின் நரம்பினிடம் வேலை இல்லை,
வேலெடுத்துப் போர்புரியும் திராவி டத்தில்
வடநாட்டுக் காரனுக்கு என்ன சத்தம்?
சாலைமரக் கனியோநம் செல்வம்; இங்கு
சஞ்சரிக்கும் அந்நியர்க்கு? இதுநாள் மட்டும்
ஓலையைப்போல் மனம்சுருண்டு விட்டோம்" என்று
உரைத்திட்ட வார்த்தைகளைக் கூர்ந்து கேட்டாள்,

இக்கருத்து முழுவதையும் கேட்டுக்; குப்பன்
எடுத்தணைக்கும் பெண்பதுமை எழுச்சி பெற்றாள்.
மக்களுக்கு இனஉணர்ச்சி; அறிஞர் பேச்சால்
மலர்ந்து வரும் நிலை நினைத்து மகிழ்ந்தாள் "நாட்டில்
அக்கரமம் ஒழிவதெந்நாள்? அது ஒழிந்தால்
அன்றேநம் திராவிடர்க்குத் திருநாள்!" என்றாள்.
தெக்கணத்து மயிற்சாயல் காட்டி; கர்ப்பம்
தொகுத்தளித்த அழகுப்பெண் நடந்து சென்றாள்,

இளங்காற்றில் நடுங்குகின்ற ஆடை மீது;
ஏற்படுமே மேடுபள்ளம்; அதனைப் போல,
குளந்தன்னில் சிறு அலைகள். பெரிய மீன்கள்.
குவியாத தாமரைப்பூக் கூட்டம். வாயைப்
பிளக்காமல் தூங்குகின்ற அரும்பு; யாவும்
புதுக்காட்சி தரக்கண்டு; நெருப்பு எண்ணம்
வளர்க்கின்ற கலைஞனைப்போல்; கவிஞ னைப்போல்;
வாரிஉண்டாள் அழகுதனை, விழி இரண்டால்!

பலர் காணும் தாமரைப்பூ தன்னை நோக்கிப்,
பார்வையொடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டாள்.
இலை பார்த்தாள். தன்சேலை நிறத்தைப் பார்த்தாள்.
இளம்பருவ உடல்தன்னைப் பார்த்துக் கொண்டாள்.
சில நாட்கள் ஊர்சென்று, மீண்டும் வீடு
திரும்பிவந்த கணவனைப்போல் ஆவ லோடு;
மலர்மீது கருவண்டு ஒட்டிக் கொண்டு
மருவுகின்ற காதல்நிலை தன்னைக் கண்டாள்.


கண்ணகியின் விழிபோல நிறம் படிந்த
கருவண்டின் உடற்சுமையை, எந்தப் பூவும்
திண்ணமாய்த் தாங்கிவிடும். அன்னம் தன்னை,
சுமந்திடத்தான் தாமரைக்கு சக்தி உண்டு.
விண்மடந்தை லட்சுமியாம்; அந்த மாது
உட்காரும் ஆசனமாம் தாம ரைப்பூ!
பெண்ணழகி கனமெங்கே? அவளைத் தாங்கும்
பூவெங்கே? நம்புவோர்க்கு மூளை எங்கே?

வெண்முல்லை தனைக்கண்டால், பெண்கள்; வெட்டி
வேர்க்கூந்தல் தனில் சூடத் தான் நினைப்பார்.
நண்டுக்கண் போலிருக்கும் வேப்பம் பூவை;
நாடாண்ட தென்பாண்டி நாட்டு வேந்தன்,
கொண்டு வரச் சொன்னதெல்லாம்; குழந்தை போல
கசக்கி எறிந்திட அல்ல. மாலை கட்ட!
எண்ணத்தில் அறிவிருந்தால், உயர்ந்த மேடை
இருக்கையிலே, பூமீதா ஏறு வார்கள்?

உயிருள்ள தாமரையின் மீது யாரும்
உட்கார நினைப்பதில்லை. நினைக்க மாட்டார்,
அயலாரும்; ஆரியரும்; எழுதி வைத்த
அறிவற்ற புராணத்தை மக்கள் நம்பி;
மயக்குகின்ற சித்திரத்தால்; மலர்ந்த பூவை
மங்கைக்குச் சுமைதாங்கி ஆக்கி விட்டார்.
சுயமரியாதைவளர்த்தால்; இதனைப் போன்ற
சித்திரங்கள் அத்தனையும் பாடை ஏறும்!

ஓடுகின்ற காவிரியில்; கங்கை தன்னில்;
உயிர்மீன்தான் அங்குமிங்கும் நீந்தும்; போகும்.
ஏடெதிர்த்து நீந்திடுமா? நீந்திற் றாமே!
இருண்டகருங் கல்கூட தெப்ப மாச்சாம்!
கேடுகளை ஒழிக்காமல், சீர் திருத்தம்
கூறுவதால் பயனில்லை. வெற்றி இல்லை.
நீடிக்கும் சுடர் விளக்கின் நிழலின் மீது
நீர்தெளித்தால், அவ்விளக்கு அணைந்தா போகும்?

எண்ணமிட்டாள் இவ்விதமாய். இளமை யோடு
இருக்கின்ற அரும்புதனைப் பறித்தாள். பின்னர்
வண்ணத்தால், குளிர்ச்சியினால், கீர்த்தி பெற்று;
"மலர்களுக்கே அரசி" எனும் பட்டம் வாங்கி;
கிண்ணம்போல் வடிவுதரும் மலர்க் கூட் டத்தைக்;
கொண்டையிட்டுக் கொண்டிருந்த கோதை கொய்து;
பண்பாடும் வண்டுதனைப் பாடச் சொல்லிப்,
பழம்போன்ற தன்வாயை மூடிக் கொண்டாள்!

★  ★




# பூமாலை--புழுதி மண்மேலே...

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

செய்தி தெரியுமா உங்களுக்கு? சமீபத்திய பத்திரிகை ஒன்றில் படித்தேன்; சென்னை மாகாணத்தில் மட்டும் ஆயிரக் கணக்கில் 'தெருப் பையன்'கள் இருக்கிறார்களாம்! அப்பப்பா! ஆச்சரியமாக இல்லையா? ஓட்டல் வாசலிலே; புகை வண்டி நிலையத்திலே; பூங்காவிலே; எங்கெங்கும்; அந்த அனாதைச் சிறுவர்கள் இல்லாத இடம்தான் ஏது?

'பிச்சைக்காரப் பயல்கள்! தொலைந்துபோகமாட்டான்களா இந்தத் திருட்டுச் சனியன்கள்!' என்று சிலர் அவர்களைத் திட்டுகிறார்களே, அது பெரிய தப்பு; உளறல்! ஏன் தெரியுமா? அவர்கள் வழியற்றவர்கள். சந்தர்ப்பத்தால் கெட்டுப்போனவர்கள். அவர்களில் நூற்றுக்கு ஒருவனாவது நல்ல பையன் இருக்கத்தான் செய்கிறான். அந்த மாதிரி 'நல்ல தம்பி' ஒருவனைப் பற்றி சேலத்துத் தம்பி ஒருவன் கடிதம் ஒன்றை-கடித ரூபத்தில் கதை ஒன்றை அனுப்பியிருக்கிறான். நீங்களும் படிக்கவேண்டாமா? அப்படியே கீழே; படியுங்கள்.

ஃ ஃ ஃ

"அன்று எனக்கு ஒரே மகிழ்ச்சி. என் ஆசை மாமா சென்னையிலிருந்து வந்திருந்தார். கேட்க வேண்டுமா? ஒரு அட்டைப் பெட்டி நிறைய எனக்கென்று விதவிதமான விளையாட்டுச் சாமான்கள்!

ஒரு கையில் கண்ணாடி பொம்மை—தவழ்ந்து வரும் பாப்பாவின் அழகான பெரிய பொம்மை; இன்னொரு கையில் ரொட்டித்துண்டு-இந்தநிலையில் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தேன் நான்.

அப்போது அங்கே வந்து சேர்ந்தான் ஓர் அனாதைத் தம்பி. அவனது கிழிந்த உடையும், ஆபாசக் கோலமும் எனக்கு ஒரே வெறுப்பாக இருந்தது. அவனோ "டக்"கென்று நின்று விட்டான். என் கையிலிருந்த பொம்மையை வெறிக்கப் பார்த்தான். ஆனால் அந்தப் பையனின் பார்வை......எனக்கு ஏனோ பிடிக்க வில்லை!

"என்னடா பார்க்கிறாய்? திருட்டுப் பயலே!" என்றேன் திமிரோடு.

அவனுக்கு கோபம் துளியும் வரவில்லை. "தம்பீ! செத்துப் போன என் தங்கச்சி மாதிரி இருக்கிறது இந்தப் பொம்மை. கொஞ்சம் தருகிறாயா, பார்த்து விட்டுத் தருகிறேன்" என்றான்; கெஞ்சினான்.

நான் கொடுப்பேனா? 'ஓகோ! பொம்மை திருடனா நீ? ஓடிப்போடா நாயே! என்று இரைந்தேன். அவன் "தம்பீ! தம்பீ!" என்று கெஞ்சியபடியே கையை நீட்டினான்.

நான் "ஐயையோ! மாமா! வாயேன்!" என்று அலறி விட்டேன். அந்தச் சமயம் பார்த்து என் கையிலிருந்த அந்தப் பெரிய பொம்மையும் தவறி கீழே விழுந்தது. உடைந்தது.

மாமா புயல் போல வெளியே ஓடிவந்தார். நான் உடைந்த பொம்மையைக் காட்டிய படியே "அவன்...அவன்..." என்று விம்மினேன். அவ்வளவு தான்; அந்தப் பையனின்மேல் பாய்ந்தார் மாமா. கன்னத்திலே 'பளார், பளார்' என்று அறைந்தார். அந்தப் பையன் ஓடினான். நான் ஏன் மாமாவை அழைத்தேன்? மாமா ஏன் அவனை அடித்தார்?—இதை எல்லாம் நான் அப்போது சிந்திக்கவேயில்லை.

ஃ ஃ ஃ

மூன்று மாதங்கள் சென்றன.

அன்று தமிழ் பரீட்சை. அவசர அவசரமாக பள்ளிக்குப் போய்க் கொண்டிருந்தேன். என் கவனமெல்லாம் தெருவில் இல்லை. 'நன்றாக எழுதுவோம்; பாஸ்செய்வோம்; மாமா தட்டிக் கொடுப்பார்' என்றெல்லாம் தான் எண்ணம்.

பின்னால் வந்த காரையோ, அதன் ஹாரன் சப்தத்தையோ நான் கவனிக்கவேயில்லை. கார் என்னை நெருங்கிவிட்டது. அதன் சக்கரங்கள் என் உடலைத் தொடும் நேரம்! இன்னும் ஒரு செகண்டில்......? நான் 'ஐயோ' என்று அலறினேன். மறுகணம்; 'குபீர்' என்று என்மேல் பாய்ந்தது ஓர் உருவம். என்னைக் கட்டிப் பிடித்து அப்பால் தள்ளியது. நான் கீழே விழுந்தேன். என்ன பயங்கரம்! உடல் நடுங்கியது. நான் பிழைத்தேன்; எழுந்தேன். கார் பறந்து விட்டது.

நான் அப்போதுதான் என்னைக் காப்பாற்றிய அந்த உருவத்தைப் பார்த்தேன். திடுக்கிட்டேன். ஏன் தெரியுமா? அன்று என் பொம்மையைப் பார்க்கக் கேட்டானே, அடி வாங்கி ஓடினானே, அவன்தான் என்னைக் காப்பாற்றியவனாக நின்று கொண்டிருந்தான். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. திடீரென்று பையில் கையைவிட்டேன். அம்மா தந்த ஒரு ரூபாய் பணம் இருந்தது. எடுத்து அவனிடம் நீட்டினேன்.

அவன் வாங்கிக் கொண்டான். திருப்பித் திருப்பிப் பார்த்தான். என்னையும் ஒரு முறை பார்த்தான். ஒன்றும் பேசவில்லை. 'ஒரு மாதிரியாக சிரித்தான். திடீரென்று பணத்தை என் காலடியில் வீசினான். திரும்பினான். நடந்தான். நான் கூப்பிட்டேன்; கத்தினேன், அவன் திரும்பிப் பார்க்கவேயில்லை. நடந்து கொண்டேயிருந்தான்'

ஃ ஃ ஃ

**கடிதம் முடிந்து விட்டது.**

**அந்தத் தம்பி நல்ல தம்பியே தான், புழுதி மண்ணிலே கிடக்கும் பூமாலை மாதிரி! அதைப் போலத்தான் மற்றவர்களும்! அவர்களைத் திருத்த முடியும்; திருத்த வேண்டும்; திருந்துவார்கள்.**

—: சொர்ணம்

## முத்துவும் செல்வியும்

### 1. பந்தயம்!

நம்மைச் சிரிக்க வைக்க எத்தனையோ கருவிகள் இருக்கின்றன அல்லவா? அதைப் போலத்தான் முத்துவும் செல்வியும். அவர்களைப் பார்த்தாலே கோபம் பறக்கும்; அவர்களின் உதடசைந்தால் சிரிப்பு பெருகும் போங்களேன்...!

அந்த அண்ணனும் தங்கையும் செய்யும் குறும்புத் தனங்களில் ஒன்று இதோ..

ஒரு நாள் முத்து பத்து ஆப்பிள் பழங்களுடன் செல்வியிடம் வந்தான்.

"இதோ பார் செல்வி! ஒரு பந்தயம்; இங்கிருந்து, அதோ இருக்குதுபார் ஒரு மாடம், அதில் போய் நீ கையை வைத்து விட்டு வர வேண்டும். அதற்குள் நான் இந்த பத்து பழங்களையும் சாப்பிட்டு விடுவேன். என்ன, சரியா?" என்றான்.

மாடம் பக்கத்தில்தானே இருக்கிறது! அதில் கையை வைத்துத் திரும்புவதற்குள் ஒரு ஆப்பிள் கூட சாப்பிட முடியாதே! இப்படி யோசித்தது செல்வி, கடைசியில் முடிவாக "உன்னால் முடியவே முடியாது! பந்தயம் ஒரு ரூபாய்!" என்றது.

பந்தயம் ஆரம்பமானது. முத்து முதல் ஆப்பிளை வாயில் எடுத்து வைத்தான் செல்வி மாடத்திடம் போனது. தொட்டுவிட்டுத் திரும்பியும் வந்தது. வேகமாகக்கூட நடக்க வில்லை. ஆனால் முத்துவோ முதல் பழத்தையே முடிக்கவில்லை.

செல்விக்கு படு மகிழ்ச்சி! "எங்கே அண்ணா சாப்பிட்டாய்? பந்தயமாம்—அதிலே இவர் ஜெயிப்பாராம்! ம்...ம்... எடு ரூபாயை!' என்றது அதட்டலாகவே.

"ரூபாய் தருவதா? எதற்காம்? நீ ஜெயித்து விட்டாயோ?" என்றான் முத்து.

"பின்னே என்னவாம்?"

"அட பெண்ணே! தோற்றது நீ தான். நான் என்ன சொன்னேன் முதலில்? நீ மாடத்தில் கையை வைத்து விட்டு வரவேண்டும் என்று தானே சொன்னேன்? எங்கே கையை வைத்து விட்டு வந்தாய்? கைதான் இதோ, உன் தோளிலேயே தொங்கிக் கொண்டிருக்கிறதே! பணம் கேட்கும் பவிசைப் பார்! பணத்தை நீ எடு தங்கச்சி, நீ எடு!" என்றான் முத்து. இரண்டாவது ஆப்பிளை ருசி பார்க்கத் தொடங்கினான்.

எப்படி இருக்கும் செல்விக்கு?

# குறளோவியம்

வைத்தியர் ஊசி குத்துகிறார். உடலில் வலி ஏற்படுகிறது. ஆனால் அந்த ஊசி வழியே உடலுக்குள் செல்லுகிற மருந்து நோய், தீர்க்கப் பெரிதும் உதவுகிறது. வைத்தியரிடம் வேதனை தரும் ஊசியும் இருக்கிறது. நோய் வேதனையை நீக்கும் மருந்தும் அதனுள் இருக்கிறது.

இங்கே திருவள்ளுவர் ஒரு வைத்தியரை குறள் மூலம் அறிமுகப்படுத்துகிறார் பாருங்கள். அழகி அழகனைப் பார்க்கிறாள். அந்தப் பார்வையை அவன் வர்ணிக்கிறான். இந்த அணங்கு இருபார்வையுடையவள். ஒரு பார்வையால் எனக்குவேதனை உண்டாக்கினாள். அடுத்த பார்வை அந்தவேதனை தீர்க்கும் மருந்தாகப் பாய்கிறது. வேதனையும் அளித்து அதை விலக்கும் மருந்தும் அளிக்கும் இந்த விசித்திரமான மருத்துவப் பெண்மணியின் பார்வைச் சிறப்பை வள்ளுவர் வாய்மொழியாகவே கேளுங்கள்.

"இருநோக் கிவளுண்கணுள்ள தொரு நோக்கு
நோய் நோக் கொன் றந்நோய் மருந்து"

அப்படி அவள் பார்க்கிறாளே என்பதற்காக பருவ இளைஞன் வாளாயிருந்து விட்டானா? அவனோ ஒரு வம்புக்கார வாலிபன் போலும், காதல் மயக்கத்தில் என்னென்ன சொல்லுகிறான் பாருங்கள்.

"நான் அவளைப் பார்க்கும்போது அவள் என்னைப் பார்க்காமல் நிலத்தை நோக்குகிறாள். நான் அவளைப் பாராதிருக்கும்போது அவள் என்னைப் பார்த்து மகிழ்கிறாள்," என்று கூறுகிறான். இது எவ்வளவு பெரிய பொய் தெரியுமா?

"நான் அவளைப் பாராதிருக்கும்போது அவள் என்னைப் பார்த்து மகிழ்கிறாள்" என்கிறானே—இவன் தான் அவளைப் பார்ப்பதில்லையே; அப்படியிருக்கும்போது அவள் இவனைப் பார்ப்பது மட்டும் இவனுக்கு எப்படித் தெரிந்தது? அதே போல இவன் அவளைப் பார்க்கும் போது. அவள் நிலத்தை நோக்குகிறாளாமே; அது எப்படி? இவனைப் பார்த்து விட்டுத்தானே அவள் பார்வையை வேறு பக்கம் திருப்ப வேண்டும்.

இந்தப் பார்வைக்குத்தான் பார்க்காமல் பார்க்கும் பார்வை என்று பெயர்போலும். இத்தகைய நிகழ்ச்சியா வள்ளுவர் எதை விளக்குகிறார் தெரியுமா? காதலன் கூறும் பொய்யை மட்டுமல்ல, அவர்கள் கண்களை வேறுபக்கம் திருப்ப அவர்கள் முயற்சித்தாலும் அது முடியாமல் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்கிறார்கள் என்பதைத் தான் சொல்லாமல் சொல்லுகிறார் செந்நாப் போதார் இதோ அந்தக் குறளோவியம்!

"யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்."

மெல்ல நகும்:— உள்ளுக்குள் மகிழ்ச்சியடைவாள் என்பதாகும்.

கருணா.

## மங்கோலிய......

4-ம் பக்க தொடர்ச்சி

பொருள்களைத் தருவித்து தன் நாட்டில் பரவிடச் செய்தான்.

அதுநாள் வரை காதுகளால் மட்டும் கேட்டு வந்த நாகரிகத்தின் சின்னங்களை கண்ணுற்ற காரகோரம் பெண்கள் பெருமூச்சுவிட்டார்கள். செங்கிஸ்கானின் தாயகமான பாலைவனப் பகுதிகளில் மாளிகைகள் எழுப்பப்பட்டன. செங்கிஸ்கான், எத்தனை நாடுகளைத் தான் சுற்றியிருந்தாலும், எப்பேர்ப்பட்ட வேந்தர்களை வென்றிருந்தாலும், அவனுடைய மங்கோலிய நாகரிகத்தைக் கைவிடவில்லை யென்று வரலாற்றாசிரியர்கள் சொல்லுகிறார்கள்,

வாழ்வின் இறுதிக்காலம் வரை செங்கிஸ்கான் காலை உணவாக குதிரைப் பாலையும், மாலை உணவாக ஆட்டிறைச்சியையும் தான் புசித்துவந்தான். ரத்தத்தை சந்தனமாகப் பூசிமகிழ்ந்த செங்கிஸ்கான், எங்கெங்கோ சூறையாடிச் சேர்த்த சொத்துக்களை இறுதியிலே தன்னைச் சூழ்ந்திருந்தவர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்து, யாராலும் மறக்க முடியாத அன்பை சம்பாதித்துக் கொண்டான்.

அவனது அந்தப்புரத்திலே எழிலரசிகள் ஏராளம்தான். என்றாலும் தன் இதயத்திலே குடியேறியவளை—அந்தக் குணவதி பொர்ட்டை செங்கிஸ்கான் உதறித் தள்ளிவிடவில்லை. உலகத்தின் கவனத்தை ஈர்ந்த அந்த ஊக்கமிகு வேந்தன் பொர்ட்டை அதிகமாக நேசித்தான், அவளுடைய இதழ் முத்திரையையே அவன் விரும்பினான். அவளும் அவனை தெய்வமாகக் கருதினாள், பூவையின் உள்ளக் கோயிலிலே அவன் பூஜைக்குரிய தெய்வமானான்!

வயது அறுபதைத் தாண்டியது. செங்கிஸ்கானின் நரம்புகளிலே சோர்வு கண்டு விட்டது. "எனக்குப் பிறகு ஒற்றுமையைக் கொன்று விடாதீர்கள்" என்று தன் புதல்வர்களுக்கு போதித்தான். அவர்களில் ஒருவனை தலைவனாக்கினான் — மூத்தவனல்ல அவன்—ஆனால், தகுதியுடையவன். செங்கிஸ்கானின் வாழ்வின் கடைசிக்காலத்தில்தன் படை வீரர்களுக்கு "போரின் சமயம், நான் இறந்து போக நேரிட்டால் ஓடிப்போய் விடாதீர்கள். என்னுடைய சாவை வைரிகளுக்குத் தெரிந்து விடும்படியாக களத்திலே காட்டிக் கொள்ளாதீர்கள்!" என்று உருக்கமான ஒரு அறிக்கை விட்டிருந்தான். அந்த அறிக்கையின் பின்பகுதியில் தன்னுடைய சடலத்தை எங்கு புதைக்கவேண்டுமென்பதையும் குறிக்காமலில்லை.

கபில நிறத்தோடு கூடிய அந்த கம்பீரமான உருவம், இலட்சத்திற்கு மேற்பட்ட கூடாரங்களில் அமைதியை நிலை நாட்டியது. அந்த வீரக் குன்றத்தின் ஆவி பிரியும்வரை உள் நாட்டுக் குழப்பம் ஏற்படவில்லை.

தரணியைக் கலங்க வைத்த அந்த தடந்தோள் வீரன் 1227ம் ஆண்டு தென் சீனாவின் விளிம்பிலே கண்ணை மூடினான். அவனது சடலம் ஓனன் நதிக்கரையில் புதைக்கப் பட்டது.

வெற்றி ஒளி வீசிக் கொண்டிருந்த அந்த வீர விளக்கு — மங்கோலிய வர்க்கத்தின் புகழ் விளக்கு அணைந்தது. மங்கோலிய இனம் தனது மெய் காப்பாளனை இழந்தது.

இயற்கை ஒரு இரத்த வெறியனை விழுங்கிவிட்டது — சண்டாளச்சாவு ஒரு புஜபல பராக்கிரமசாலியை புதை குழிக்கு அனுப்பிவிட்டது.

['கார்னெட்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளியான கட்டுரையைத் தழுவியது.]

## சக்கரவர்த்தி........

[5-ம் பக்க தொடர்ச்சி]

அந்தரங்க வேலைக்காரியுமான—மந்தரை என்பவளுக்கு ஒன்றுமே தெரியாது, பக்கத்தில் உள்ள ஒரு தோழியிடம் கேட்டு, அந்தக் கொண்டாட்டமெல்லாம், ராமன் பட்டம் சூட்டும் விழாவிற்கு என்று தெரிந்து கொள்கிறாள், மந்தரை மட்டுமல்ல; மகாராணிகளில் ஒருத்தியாகிய கைகேயிக்குக்கூட இந்த செய்தி மந்தரை மூலமாகத்தான் கிடைக்கிறது. இந்த விபரங்களையெல்லாம் ஆச்சாரியார் இந்த வார இதழில் (ஆகஸ்ட் 15, கல்கி) எழுதியிருக்கிறார்,

சாதாரண ஜனங்கள் ராமன் முடி சூட்டுவிழா செய்தி கேட்டு கொடி கட்டி கொண்டாடுகிறார்களாம் கூட்டம் கூட்டமாக! ஆனால் அந்த செய்தி "கல்மஷ" மனமில்லாத கைகேயிக்கும் தெரியாதாம்—அவள் அந்தரங்க வேலைக்காரி மந்தரைக்கும் தெரியாதாம்!

அப்படி என்றால் என்ன பொருள்? பரதனையும், கைகேயியையும் ஏமாற்ற "சதி" நடந்திருக்கிறது என்று தானே நாம் முடிவு கட்ட வேண்டியிருக்கிறது--நாமென்ன; மூளையுள்ளவர் அனைவருமே அப்படித்தான் முடிவு கட்டுவார்கள்.

## உரிமை பறிப்போர்...

[1-ம் பக்க தொடர்ச்சி]

அவரேதான் அந்த நோய் தீர்க்கும் மருந்துமாகும்! புடமிட்டுத்தந்து அதை குணப்படுத்த வேண்டிய கட்டாய நிலையிலிருப்பவரும் அவர் தான். அவர் தராவிடில் திரு-கொச்சி தமிழர்கள் அதை போராடிப் பெற்றிட உரிமை உண்டு. அந்த உரிமையைப் பறிப்போர் உலகத்தின் குப்பை மேடுகளைத்தான் தங்கள் அந்திய கால வீடாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதை யாரும் மறந்து விடக் கூடாது!


# "கிளர்ச்சி"

( ஆசிரியர் : இராசு. தங்கப்பழம் )

திராவிட இயக்க வரலாற்றிலே 'கிளர்ச்சி'யையும் அதன் ஆசிரியர் தோழர் தங்கப்பழம் அவர்களையும் எளிதில் மறந்துவிட முடியாது, வீண் வம்பும், வீராப்பும் செய்து இயக்கத்துடன் மோதிய மாற்றுக் கட்சி இதழ்கள், அவர் தொடுத்த கணையினால் கருகிய செய்தி மறக்கக் கூடியது அல்ல.

தூத்துக்குடி சதி வழக்கினால் சென்ற 317 நாட்களாக சிறையினுள் தள்ளப்பட்டு ஜாமீனில் வெளி வந்திருக்கும் ஆசிரியரின் நேர் பார்வையில் 15—8—54 முதல், அதிக பக்கங்களுடன் புதுமைக் கருத்துக்கள், கிண்டல் சித்திரங்களோடு வெளி வருகிறது.

கிளர்ச்சி அலுவலகம் திருமங்கலம் (மதுரை மாவட்டம்)

(ADVT.)

# கலைத் தோட்டம்

## புரட்சிப் புயல்

★

பல்லாண்டுகள் காத்துக் கிடந்த பின் கிடைத்தது ஒரு மழலைச் செல்வம். தாயுக்கு தாங்கொணா மகிழ்ச்சி. தன் தளிர்த் தங்கத்தின் மேனியைத் தொட கையை நீட்டுகிறாள். தொட்டில்காலி; செத்துவிட்டதாம் அவள் செல்வக் கொழுந்து! அப்போது தாயின் நிலை......?

ஏக்கத்தின் முழுச் சிலையாவாள் அந்தத் தாய்!

அன்றொரு நாள்; அதே நிலையில்; கொந்தளிக்கும் சோகப் பெருங்கடல்; அதிலே குமுறும் நெஞ்சத்துப் பேரலைகள்—இக்கோலத்தோடுபாரிஸ்நகரத்தின் அழகு வீதிகளில் தள்ளாடித் தடுமாறி நடந்து கொண்டிருந்தான் ஒரு ஏழை எழுத்தாளன், தான் பெற்ற இரட்டைச் செல்வங்கள்-ஈடற்ற இரு காவியங்கள் தீயோரின் பாபக் கரங்களால் தீக்கிரையாகிக் கொண்டிருந்தது கண்டு!

அவன்அழுதான்; அலறினான்; இருக்காதா? ஆண்டுகள் பலவற்றின் அரிய முயற்சியல்லவா அவை? "என் மடியில் தவழும் மைந்தன் ஒருவன் செய்தான் இந்தச் சிறப்பேடுகளை; வாழ்க அவன்!" என்று போற்றிப் புகழ வேண்டிய நாடு, அவனுடைய இரு நூல்களையும் ஒன்றாக நெருப்பிலே 'நீரா'க்குவதென்றால்......?

ஒன்று சமுதாயத்தின் நிலைக் கண்ணாடி; வற்றாதவறுமையை, ஆகாத அடிமை வெறியை, வேண்டாத வேதனைகளை, மனிதனாகப் பிறந்துவிட்ட ஒருவன் சமுதாயத்தின்கட்டளைக்கு முன்னோடும் பிள்ளையாக மாறிவிடும் சோகத்தை—கோணத்துக்குக்கோணம்படமெடுத்துக் காட்டிய **சமுதாய ஒப்பந்தம்**, மற்றொன்று, நாட்டின் நாளைய மன்னர்களை-மாணவப் பெருங்கூட்டத்தை சுற்றி வளைத்திருக்கும் சீர்கேடான கல்வித் திட்டத்திற்கு மறுப்பு; புதியதொரு மார்க்கம்—இவைகளைச் சொல்லும் **எமிலி**! இவை இரண்டும்தான் தீயிலே வாழ்ந்து கொண்டிருந்தன. பாரிஸ் உயர்நீதி மன்றம் விட்ட 'சாபம்' அது!

ஆனால், அதே எழுத்துக்கள்தான் ஒருநாள் பாஸ்டிலியைத் தகர்த்தது! லூயியைக் கொன்றது! முடியரசை வீழ்த்தியது! உண்மைதான்; புரட்சிக்கு வித்திட்ட பொன்னெழுத்துக்கள் தான் அவை!

ஆனால், அந்த வலிமை மிக்க எழுத்துக்களைப் படைத்த ஏழையின் — வஞ்சிக்கப்பட்ட நாடோடி எழுத்தாளனின்-சுதந்திரப் பித்தன் **ரூசோவின்** வாழ்வு ஒரு சோகச் சுமை; தோல்விக் கதை!

அவனது வாழ்க்கை பிறந்த பதினைந்தாம் தினம் தாயைப் பிரிந்த பரிதாபத்தோடு தொடங்கியது! தாய்மையின் பாசப் பிணைப்பு அவனுக்கில்லை. தந்தை தாயாக இருக்கத்தான் விரும்பினார். ஆனால் வழக்கொன்றில் சிக்கியிருந்த அவரை தண்டனை என்ற கோரக் கரங்கள் நாட்டை விட்டே துரத்திவிட்டது பதினான்காவது வயதிலே நீலவானத்தையும், நீள் மணலையும் நம்பும் நாடோடியானான்-அனாதையானான் ரூசோ

சிறியதந்தை என்று சொல்லிக் கொண்டுவந்த ஒருவர், அவனுக்குத் தந்த சிறு கல்வி உதவி அவனுக்கு வேலையொன்றை வாங்கித் தந்தது. ஆனால் அவனது சுதந்திரப் பித்து முதலாளிக்கு பேராபத்தானது. 'திருடன்' என்ற சிறப்புப் பெயரோடு வெளியேறினான் அவன்.

"நாமும் எழுதுவோம்; நல்லோர் பட்டியலில் புது இடத்தைப் பெறுவோம்" என்று எண்ணாதவன் ரூசோ ஆனால் அவனை 'யார்?' என்று அவனுக்கே உணர்த்தி, எழுதத் தூண்டியவள் ஒரு பெண்மணி. **லாரன்ஸ்** என்ற பெயருடைய சீமாட்டி 'அனாதையாகத் திரிந்த அவனை அவள் தன் இல்லம் அழைப்பானேன்? ஊர் சுற்றிக்கு உதவிகள் செய்வானேன்? என்ற சந்தேகம் பலருக்கு எழுந்தது. அவள் அவனைக் காதலித்தாள் என்கிறார்கள் சிலர். இருக்கலாம்; நம்ப முடியவில்லை. ஏனெனில் அப்போது அவன் வயது பதினான்கு! அவள் வயதோ இருமடங்கு; இருபத்தி எட்டு! காதல் பிறக்க வழியில்லை; உண்மையும் தெரியவில்லை. ரூசோவும் தனது சுய சரிதத்தில் அந்த சீமாட்டியை 'என்னை வாழவைத்தவள்' என்ற சொற்றொடர்களோடு நமக்கு அறிமுகப் படுத்துவதை நிறுத்திக் கொள்கிறான்,

ஆனாலும் அந்தப் பெண்ணின் அன்புதான், வாழ நினைக்காது உலகத்தின் அகண்டகரத்திலே உருண்டு கொண்டிருந்த ரூசோவைஎழுத்துலகத்திற்குள் தள்ளியது. பாரிஸ் நகரத்தில் தயாரான 'கலைக் களஞ்சிய'த்தில் எழுதியதின் மூலம் தான் ஒரு கலாமேதை என்பதை பொறித்துக் கொண்டு விட்டான் ரூசோ.

'டிஜோன்' கலைக் கழகம் அவனை ஒரு போட்டியில் ஈடுபடச் செய்தது. 'கலை விஞ்ஞானம் இவற்றால் மனிதன் முன்னேறுகிறானா? வீழ்ச்சி அடைகிறானா?' — இந்தக் கேள்விக்கு ரூசோ அளித்த ஆணித்தரமான கருத்துக்களை-அவை புகுந்து வந்த சொல்லலங்காரங்களைக் கண்ட கழகம் அவனது வாதத்தை ஏற்றது; பரிசளித்து பாருக்கு அறிமுகப்படுத்தியது.

மேதைகளின் சொந்த வாழ்க்கையில் ஏதேனும் குறை இருக்கத்தான் செய்யும் என்பார்கள், அதற்கு ரூசோ விலக்காக முடியுமா? அவரது திருமணம் ஒரு புதிர்-புரியாத குழப்பம்! ஏனெனில், அந்த இலக்கிய மேதையை மணக்க எத்தனையோ அழகு ராணிகள் துடிதுடித்து நிற்க, ரூசோ ஒரு காதல் மனைவியைப் பெற்றார்

**தெரிசாலி** என்ற அந்தப் பெண்மணி விகாரத் தோற்றத்தினள்; விபரீத குணத்தினள்! இல்லாவிடில் ஐந்து குழந்தைகளைப் பெற்று, அத்தனைக்கும் மருத்துவ மனையிலேயே 'கடை' வைப்பாளா? விற்றுவிட்டு வீடு திரும்புவாளா, சிக்கனம் என்ற விசித்திரப் பெயர் சூட்டி?

ஆனாலும் ரூசோ அந்த தாய்மை அற்றவளைத்தான் மணந்தார்; ஐந்து சிசுக்களைப் பெருமளவு வாழ்ந்துமிருக்கிறார்; இதுதான் புதிர்!

ரூசோ அரசியல் துறையில் அடியெடுத்துவைத்த போது பிரஞ்சு ஏகாதிபத்தியம் புருவங்களை நெறித்தது; புதுப் பார்வை வீசியது. ஆட்சி முறையை எதிர்த்து, அதன் ஏகபோக உரிமைகளைக் கண்டித்து, அதனுடைய செல்வக் குழந்தைகளாம் சீமான்களின் செருக்கைத் தூற்றி எழுதினான் எந்த ஆட்சிதான் பார்த்துக் கொண்டிருக்கும்?

ரூசோ எழுதினான், எழுத்துக்கள் லூயி சர்க்காரை நோக்கி, கனவான்களின் மாளிகையைக் குறிவைத்து நிறுத்திய பீரங்கிகளாக மாறின, அவ்வளவுதான்; அரசாங்கத்தின் இரத்த ஏட்டிலே 'அபாய மனிதனா'னான் ரூசோ.

அப்போதுதான் 'சமுதாயப் ஒப்பந்த'மும் 'எமிலி'யும் உருவானது. ஆட்சிபீடம் 'ஐயோ' என்றது. பணம் படைத்த அதன் பக்த கோடிகள் 'ஆகா' என்றனர். பின்... ரூசோ துரத்தப் பட்டான்.

நடோடி மீண்டும் நர்டோடியானான், அவனது சத்தான சமுதாயக் கருத்துக்களை வரவேற்றது இங்கிலாந்து. தஞ்சமடைந்தான் ரூசோ அங்கே. ஏழாண்டுகள் கழித்து மீண்டும் அவன் பிறந்த பூமியில் புகுந்த போது, அவனது பொன்னேடுகளைக் கொளுத்திக் களித்தது சர்க்கார் அவன் கண்முன்னே! அவன் மனமுடைந்தான்,

அன்றொரு நாள்; அதிகாலை நேரம்! பாரிஸ் நகரத்து நீரோடை ஒன்றின் கரையிலே உருக்குலைந்த பிணம் ஒன்று கிடந்தது! 'கொலையா? தற்கொலையா?' என்ற கேள்விக்கு "மர்மச்சாவு" 'என்ற பதில்தான் கிடைத்தது. ஊரார் திரண்டு வந்து பார்த்தனர்; புலம்பிச்சென்றனர் ஏகாதிபத்தியக்கொடி மரத்தை ஆட்டிப் பிடுங்க முயற்சித்த ரூசோதான் அவன்; ஆட்சிபீடம் தன் 'பரிசை'த் தந்துவிட்டிருக்கலாம்; பரிதாபகரமாகக் சொல்லப் பட்டிருக்கலாம் **அவன்!** ஆனால், அவனது சாவுக்குக் காரணமான அதே எழுத்துக்கள்தான்அடுத்தபதினேழாவது ஆண்டில் பிரஞ்சு நாட்டு வெறி பிடித்த முடியரசின் சாவுக்கும் காரணமாக அமைந்துவிட்டது.

ரூசோ மறைந்து விட்டான்! ஆனால் 'எங்கள் பூமி' என்ற இன்பக் நினைவிலே பிரஞ்சுக் குடியரசில் உலவும் பெருமக்களின் நெஞ்சத்தில் அவன் என்றென்னும் வாழ்கிறான்.

---

### நீதியின் வேலை

★

**"குற்றவாளியைத் திருத்த வேண்டும்; கொடியவர்களை நல் வழிப் படுத்த வேண்டும்; கொலைஞர்களைக் குணவான்களாக்க வேண்டும்; மோசக்காரர்களைமேதைகளாக்கவேண்டும்; இவைகளே ஒரு நீதியின் உயர்ந்த நோக்கங்கள்; ஒருவன் கருத்தைச் சிதைப்பதல்ல அதன் நோக்கம். அந்த நன்னோக்கங்கொண்ட நீதியைத் தலை குனிய வைத்து நிரபராதிகளைப் பழி தீர்த்து தனது பழி தீர வஞ்சப் பசியைத் தணித்துக்கொண்டு ரத்த வாயோடு சிரிப்பதல்ல ஒரு நீதி மன்றத்தின் வேலை."**

— ரூசோ (சமுதாய ஒப்பந்தம்)

---

### சிறு குறிப்பு

●

| | | | |
|---|---|---|---|
| **பிறப்பு :** | **1712,** | **ஜூன்.** | **27** |
| **மறைவு :** | **1778,** | **ஜூலை,** | **2** |

**புகழ் முத்துக்கள்:**

**சமத்துவ மில்லாமையின் அடிப்படை,**

**சமுதாய ஒப்பந்தம்,**

**எமிலி,**

**சுய சரிதம், வசனங்கள்.**

12

# கடைசிப்பக்கம்

முருகையா—ராயபேட்டை

(?) அர்த்தமுள்ள அடுக்குத் தொடர்—அர்த்தமில்லா அடுக்குத் தொடர் — இரண்டுக்கும் உதாரணம் கூற முடியுமா?

முடியும்! மூவேந்தர் மரபில் வந்த முடி புனையா முத்தமிழ் முழு நிலவு போன்ற முருகையாவே! முடியும்!—(இது அர்த்தமில்லா அடுக்குச் சொல்)

அடுக்குச் சொல்லால் தமிழை அலங்கரித்தது அறிஞர் அண்ணா தான்!
(இது அர்த்தமுள்ள அடுக்குச் சொல்)

புரிகிறதா நண்பரே; இரண்டுக்கும் வித்தியாசம்!

சி. ஆர். ஆசைத்தம்பி
— தியாகராய நகர்.

(?) முரசொலி கடைசிப் பக்கத்தில் "கேள்வி பதில்" இருப்பது போல் வாழ்க்கையின் கடைசிப் பக்கத்தில் என்ன இருக்கும்?

வாழ்க்கையின் கடைசிப் பக்கத்தில் மரணத்தின் முதல் பக்கம் இருக்கும்.

கலாநிதி—அம்பத்தூர்.

(?) ஏழையின் கண்ணீர்; நல்ல குணம் படைத்த பணக்காரனின் பன்னீர்—இவைகளில் எதற்கு முதலில் மதிப்புக் கொடுப்பீர்கள்?

பணக்காரனின் பன்னீருக்குத் தான்! ஏனெனில் ஏழையின் கண்ணீரால் செய்யப்பட்டது அது.

(?) அறிவு எங்கேயிருக்கிறது?

முட்டாள்கள் வீட்டு வாசலுக்கு வெளியே!

எம். ராஜா — குளிலியம்
(பாறை.

(?) தி. மு. க. வின் போராட்டங்களை புஸ்வாணப் போராட்டம் என்கிறாரே; மணலி கந்தசாமி—அதுபற்றி உங்கள் கருத்தென்ன?

அவர் அப்படித்தான் சொல்லுவார்—ஏனெனில் அவர் பாதாளப் பிரவேசப் போராட்டம் நடத்தியபோது புகலிடம் தந்த தோழர்களின் முகாமுக்கு, வேறு எப்படித்தான் அவர் நன்றி காட்டுவது?

சே. இராசன்—வெள்ளமடை.

(?) மாசேதுங்—லெனின்—லிங்கன் — காந்தி — எல்லோரும் சினிமாவுக்கு வசனம் எழுதியா தங்கள் லட்சியத்தை நிறைவேற்றினார்கள் என்று ஒரு தினப்பத்திரிகை ஆசிரியர் கேட்கிறாரே; அது பற்றி தங்கள் அபிப்பிராயம் யாது?

அவரைப் பார்த்து நீங்கள் கேளுங்களேன்; லெனின், மாசேதுங், காந்தி முதலியவர்கள், சினிமாவுக்கு வசனம் எழுதுபவர்களைப் பார்த்து வயிற்றெரிச்சலை வெளியிட்டதாலா, தங்கள் லட்சியத்தை நிறைவேற்றினார்கள் என்று!

ஜி. எஸ், பாண்டியன் –சிலோன்.

(?) திராவிட நாடு தனியாக பிரிந்து விட்டால் கல்கி, விகடன், போன்ற ஆரிய பத்திரிகைகள் என்ன செய்யும்?

திராவிடநாடு சுதந்திர மலர் அழகாக வெளியிடுவார்கள்.

கா. ர. சோக்கன்—பச்சையப்பன்
கல்லூரி—சேத்துபட்டு.

(?) திராவிட நாட்டுப் பிரிவினை பற்றி கம்யூனிஸ்டுகள் ஒரே மேடையில் வாதிட முன் வருவார்களா?

அவ்வளவு பெரிய பிரச்னைக்கு ஏன் போகிறீர்கள்? பாவம், அவர்கள் கம்பராமாயணத்தைப் பற்றிக்கூட ஒரே மேடையில் வாதிடுவதற்கு வரமாட்டார்கள்.

வேந்தன்—நாகர் கோயில்
(வடசேரி.

(?) திருவாங்கூரில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய தாணுப் பிள்ளைக்கு ஆகஸ்டு 15ல் என்ன பட்டம் கொடுத்திருக்கலாம்—?

தாணுப்பிள்ளையைத்தான் முன்பே பட்டம் கட்டிவிட்டார்களே—சாற்றடித்ததும் பறக்க வேண்டியதுதான் பாக்கி.

வீராச்சாமி—நாகை.

(?) ஆகஸ்டு 15, துக்கநாள் என்றும் அன்றையதினம் ஒப்பாரி வைக்க வேண்டுமென்றும் வழக்கமாக அறிவித்து வந்தவர்கள் இந்த ஆண்டு மாத்திரம் ஏன் அப்படி அறிவிக்கவில்லை?

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ மாநிலத்தீர்"

★




மு.: கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. அலுவலகம்:
62, எஸ். பி. சன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை-14.